ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு

தொகுப்பாளர் :
ம.பொ.சி.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு

தொகுப்பாளர் :
ம. பொ. சி.

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : செப்டம்பர் 6, 1964.
உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை 50 காசுகள்

ம. பொ. சி. எழுதிய
ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு பிரசுரங்கள்

★

தமிழா, ஆங்கிலமா ?	...	1-50
காந்தியடிகளும் ஆங்கிலமும்	...	1-00
பாரதியும் ஆங்கிலமும்	...	1-00
இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா ?	...	0-80

அச்சிட்டோர் :
ஜீவன் பிரஸ், சென்னை-5 (953)

முன்னுரை

பாரதப் பெருநாடு ஆங்கிலப் பேரரசிற்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில், ஆங்கில மொழியின் ஆதிக்கம் தோன்றி, 200 ஆண்டு காலம் நீடித்தது. ஆங்கிலப் பேரரசு அகன்று பாரதம் விடுதலை பெற்ற பிறகு, ஆங்கில மொழியின் ஆதிக்கமும் அகலுமென்று நம்பினோம்; நம்பச் செய்தது காங்கிரஸ் மகாசபை.

பாரதம் விடுதலை பெற்று 18 ஆண்டுகள் ஆகின்றன. அனைத்து மாநிலங்களிலும்—மத்தியிலும், காங்கிரஸ் கட்சியே ஆட்சி புரிகின்றது. இருந்தும், ஆங்கில ஆதிக்கம் அகலவில்லை. அந்த ஆதிக்கத்தை அகற்றத் திட்டமிட்டுப் பாடுபடுகின்றது தமிழரசுக் கழகம். அதனால், தமிழரசுக் கழகம் மட்டுமே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பதாகச் சில பெரியவர்கள் கூடத் தவறாக எண்ணுகின்றனர். தனி நபர்களிலே என்னைத் தவிர ஆங்கில ஆதிக்கத்தை எனக்கு முன்னிருந்த பெருமக்களில் யாரும் எதிர்க்காதது போலவும் பேசுகின்றனர்.

இது உண்மையல்ல. ஆங்கில ஆதிக்கம் தோன்றியபோதே அதனை எதிர்க்கும் கிளர்ச்சியும் உடன் தோன்றியது.

கவிஞர்கள், ஐரோப்பிய அறிஞர்கள், இந்தியத் தலைவர்கள் ஆகிய பல்லோர் தொடர்ந்து வாழையடி வாழையாக ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து வந்துள்ளனர். அந்த வரலாற்றை விரித்துரைத்து நம்முடைய முன்னோர்கள் தெரிவித்த கருத்துக்களைத் தொகுத்து இந்த நூல் வடிவில் தந்துள்ளேன்.

தமிழரசுக் கழக மத்திய செயற்குழு, செப்டம்பர் 6 முதல் 12-ந் தேதி வரை ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வாரம் கொண்டாடத் தீர்மானித்தது. அந்த வாரத்தை யொட்டி விசேஷப் பிரசுரமாக இந்நூல் வெளிவருகிறது.

இதனைப் படிப்போர் தத்தம் நண்பர்களையும் வாங்கிப் படிக்குமாறு தூண்ட வேண்டும். இந்த நூலை வெளியிட ஆர்வத்துடன் முன் வந்த இன்ப நிலைய அதிபர் திரு. சோம. சாமிநாதன் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ம. பொ. சிவஞானம்.

ஆங்கில ஆதிக்கமும், எதிர்ப்புக் கிளர்ச்சியும்

ஆங்கிலேயர் பாரத நாட்டை ஆளத் தொடங்கிய போதுதான் ஆங்கிலம் மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும், நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாகவும் செய்யப்பட்டது.

"ஒரு நாட்டை அல்லது ஒரு இனத்தை அடிமைப் படுத்த வேண்டும் என்றால், முதலில் அதன் மொழியை அடிமைப்படுத்து; அதாவது, ஆளுவோர் மொழியை ஆளப்படும் மக்கள் மீது சுமத்து" என்பது ஏகாதிபத்தியவாதிகளின் சித்தாந்தம்!

இதன்படி, பாரதத்தில்—ஆங்கிலேயர் ஆதிக்கம் பெற்ற பிரதேசத்தில்—ஆங்கிலமொழி ஆதிக்கம் பெற்றது. பிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் பெற்ற புதுவை—காரைக்கால்—சந்திரநாகூர் பகுதிகளில் பிரெஞ்சு மொழி ஆதிக்கம் பெற்றது. போர்ச்சுகீசியர் ஆதிக்கம் பெற்ற கோவா—டையூ—டாமன் பகுதிகளில் போர்ச்சுகீசிய மொழி ஆதிக்கம் பெற்றது.

ஆங்கில ஆட்சியில், மாவட்ட கலெக்டர் பதவி முதல் மாநில அரசாங்க பிரதம காரியதரிசி பதவி வரையுள்ள பெரிய பெரிய நிர்வாகப் பதவிகளில் ஆங்கிலேயர் (வெள்ளையர்)களே இருந்தனர். இந்தியர்(கறுப்பர்) அந்தப் பதவிகளை நினைக்கவும் முடியாத நிலையிருந்தது. அதனால், ஆளுவோருக்குத் தெரிந்த மொழியான ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டிய அவசியம் இருந்தது.

ஆங்கிலேயர் பாரதத்தை ஆட்சி புரிந்த காலத்தில், அரசாங்கத்தை நடத்துவதற்கான சிப்பந்திகளை

இந்தியரிலிருந்தே தயாரிக்கவேண்டி யிருந்தது. அதனால், சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்கான உயர்தரக் கல்விக்கு ஆங்கிலம் போதனு மொழியாகச் செய்யப்பட்டது.

அந்நாளில், இந்தியாவிலிருந்த லட்சக்கணக்கான ஆங்கிலேயர் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்காகவும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் போதனு மொழியாக்கப்பட்டது.

மற்றும், இந்த நாட்டில் முதன் முதலாக உயர்தரக் கல்வி கற்பதற்கான கல்லூரிகளை நிறுவியவர்கள் பிரிட்டிஷ் மிஷனரிகளாவர். அதனால், அவர்கள் தம் தாய் மொழியான ஆங்கிலத்தையே போதனு மொழியாக்கினர். பின், நம்மவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கல்லூரிகளும் பிரிட்டிஷ் மிஷனரிகள் காட்டிய தவருன வழியிலேயே செல்லலாயின.

பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய காலத்தில், ஜில்லா மாஜிஸ்திரேட்டிலிருந்து, உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிவரை ஆங்கிலேயர்களே அமர்ந்திருந்தனர். இத்துடன், இங்கிலாந்திலுள்ள பிரிவிகவுன்சில்தான் இந்திய உயர்நீதி மன்றங்களுக்கு மேற்பட்ட அப்பீல் கோர்ட்டாக இருந்தது. இந்தக் காரணங்களால், இந்திய நீதி மன்றங்கள் ஆங்கிலத்தில் நடைபெறலாயின.

இத்தனைக்கும் மேலாக, இந்திய சமுதாய மக்கள் அறிவுப் பாதையில் வேகமாக முன்னேறுவதை ஆங்கிலேயர் விரும்பவில்லை. அதனுலேயே, ஆரம்பக் கல்வியைக் கூட எல்லோருக்கும் கட்டாயமாக வழங்குவதற்கான சட்டம் செய்யவும் அன்னூர் மறுத்தனர். ஆம்; சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்கு அதிகமாக கல்வியைப் பரவலாக்க ஆங்கிலேயர் விரும்பவில்லை. அதனுல், ஆங்கிலத்தை ஆரம்பப் பள்ளியிலேயே புகுத்தி, உயர்தரக் கல்வி வரை அதையே போதனு மொழியாகச் செய்து, உயர்தரக் கல்வியை, சாதாரணப் பொதுமக்களுக்கு எட்டாக் கனியாக்கினர்.

கல்லூரிகளில் போதனு மொழியாக ஆங்கிலம் திணிக்கப்பட்டபோதே அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. எதிர்த்தவர்களில் ஆங்கிலேயர்களே முன்னணியில் இருந்தனர்.

“கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் ஆதிக்கமடைந்த ஆரம்ப காலத்தில், மேல் நாட்டுக் கல்வியை இங்கே புகுத்துவது பலனுள்ளதா யிருக்காது என்ற ஐயத்துடன், அவர்கள் அதை மேற்கொள்ளவில்லை” என்று, “தாய் மொழி மூலம் கல்வி” என்னும் தமது நூலில் கூறுகின்ருர், ஸ்ரீமந் நாராயண் அகர்வால். இதனுல், கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையர்கள் ஆங்கிலத்தைப் போதனு மொழியாக்குவது பற்றி ஆலோசித்து, பின் கைவிட்டனர் என்று அறிகிரேம். அதே நூலில்,

> “கிறித்துவப் பாதிரிமார்களின் முயற்சியிஞல், மேல் நாட்டுக் கல்வி முறையும், ஆங்கில மொழி மூலம் கல்வி போதிப்பதும் வளர்ந்தன... சில இந்தியத் தலைவர்கள் அந்த மொழி மூலம் மேல் நாட்டுக் கல்வி பயில்வதை வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கினர். கீழ்நாட்டு மொழிகள் மூலம் கல்வி போதிக்க வேண்டும் என்று கூறியவர்களுக்கும், ஆங்கில மொழிக்குப் பரிந்து பேசியவர்கட்கும் இடையில் பல ஆண்டுகள் கடும் போராட்டம் நடந்தது.”

என்கிருர் அகர்வால். இதனுல், கடுமையான எதிர்ப்புக்கிடையேதான் ஆங்கிலம் போதனு மொழியாக்கப்பட்டது என்ற உண்மை புலப்படுகிறது.

பின், அப்போது பிரிட்டனில் ‘விக் கட்சி’ (பிற்காலத்தில் லிபரல் கட்சி)யின் தலைவராக இருந்த **லார்டு மெக்காலே** என்பவர் இந்தியா வந்து கல்விப் பொறுப்பை ஏற்றபோது, போதனு மொழி பற்றிய கருத்துப் போருக்கு அவர் முற்றுப் புள்ளி வைத்தார். இது நிகழ்ந்தது 1835-ல். அப்போது இந்திய வைசிராயாக இருந்தவர் போதனுமொழிப் பிரச்னேயில் கல்வி நிபுணர்கள் நடத்தும் கருத்துப்

போருக்கு முற்றுப்புள்ளி வைக்க லார்டு மெக்காலேக்கு அதிகாரமளித்தார்.

ஆம்; தனியொரு மனிதரான—இந்தியரல்லாத பிரிட்டிஷ்காரரரான—லார்டு மெக்காலே கருத்துப்படித் தான் ஆங்கிலம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அரசாங்க ஆணைப்படி போதனுமொழி யாக்கப்பட்டது. அவரும் தற்காலிக ஏற்பாடாகத்தான் ஆங்கிலத்தைப் போதனு மொழியாக்கினுராம். இதோ சான்று:

> "இந்தியப் பாட முறையில் ஆங்கில மொழி மூலம் கல்விகற்பிப்பதை நிரந்தரமாக்க வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுதில்லை. அப்பொழுது இந்திய மொழிகளில் தகுந்த பாட புத்தகங்கள் இல்லாதிருந்தன. மேலும் கிடைத்த சில புத்தகங்களும் செய்யுள் நடையிலேயே இருந்தனவாதலால், தற்கால முறைக்கேற்பத் தயாரிக்கப் பட்ட ஆங்கிலப் பாட புத்தகங்களையே உபயோகிப்பது உசிதமென்று கருதப்பட்டது. ஆனுல், நாளடைவில் பயன்தரக் கூடிய முறை தாய் மொழி மூலம் கல்வி அளிப்பதுதான் என்று பிரிட்டிஷ் கல்வி நிபுணர்களே உணர்ந்தார்கள்."

என்று திரு. அகர்வால் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

லார்டு மெக்காலே கருத்துப்படி ஆங்கில மொழியின் வாயிலாகவே கல்வியறிவிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்க சர் சார்லஸ் வுட் (பிற்காலத்தில் வைகவுண்ட் ஹாலிபாக்ஸ்) தலைமையில் ஒரு குழுவை அமைத்தார் இந்திய வைசிராய்.

அந்தக் குழு லண்டனுக்குச் சென்று அங்குள்ள கல்வி முறையை ஆராய்ந்து, அதன் நகலாக தற்காலத்தில் நம் நாட்டில் நடைமுறையிலுள்ள கல்வித் திட்டத்தை 1854-ல் அளித்தது.

ஆயினும், குழுவின் தலைவர் சார்லஸ் வுட் மன நிறைவு பெறவில்லை. தாம் இந்திய வைஸ்ராய்க்கு அனுப்பிய தனிக் குறிப்பில், தாய்மொழியை போதனு

மொழியாக்குவதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும், தாய்மொழியின் வாயிலாகக் கல்வி போதிப்பதனுல் மட்டுமே இந்தியாவில் பொது ஜனக் கல்வியை வளர்க்க முடியுமென்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிருர். இந்த வரலாற்றுச் செய்தியைத் தமது நூலில் எடுத்துக்காட்டியுள்ளார் அறிஞர் அகர்வால். மெக்காலே கல்வித் திட்டம் தற்காலிகமாகவே அமுல்நடத்தப்பட்டதால், அதில் மாறுதல் காண இந்திய அரசும், மாநில அரசுகளும்—கடந்த ஒரு நூற்ருண்டு காலமாக—அடிக்கடி கல்வி நிபுணர்கள் கொண்ட குழுக்களை அமைத்து வந்துள்ளன.

ஹர்டாக் என்பவர் தலைமையில் மத்திய அரசினர் நியமித்த கல்விக்குழு, "தாய்மொழிப் படிப்புப்பெற்ற மாணுக்கன், ஆங்கிலப் பயிற்சிக் குறைவினுல் முதலில் சிறிது சிரமப்பட்டாலும், தாய்மொழி மூலம் கற்பதால் பிறபாடங்களையும் பொது விஷயங்களையும் மிக நன்ருகப் புரிந்து கொண்டு, முதலில், ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணுக்கரைவிட அதிகத் தேர்ச்சி பெறுகிருன் என்று பலர் சாட்சியங்கூறினர்" என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

1880-ல் ஹன்டர் கமிஷன் என ஒன்றை நியமித்தது இந்திய அரசு.

1902 ல் மற்ருெரு வெள்ளையர் தலைமையில் பல்கலைக் கழகக் கமிஷன் ஒன்றை நியமித்தது.

1917ல் சர். சாட்லர் தலைமையில் ஒரு கமிஷன் நியமித்தது மத்திய அரசு. இக் கமிஷன், "தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் முறையே சிறந்தது" என்று அறிக்கை சமர்ப்பித்தது.

1924ல் இந்திய பல்கலைக் கழகங்களின் மாநாடு கூடி, உயர்தரக் கல்வியில் மாறுதல் காண்பது பற்றி ஆலோசித்தது.

1937ல் இங்கிலாந்தி லிருந்து திரு. ஆபட் வுட் என்ற ஆங்கிலேயர் தலைமையில் ஒரு குழு இந்தியா வந்து, தொழில் நுட்பக் கல்வி பற்றி ஆராய்ந்தது.

இத்தனைக் குழுக்களும் அவ்வப்போது சமர்ப்பித்த அறிக்கைகளால் கல்வி முறைகளிலும், கல்வி நிலைய நிர்வாகத்திலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனால், போதனை மொழியில் மட்டும் மாறுதல் ஏற்படவில்லை. ஆம்; மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது; உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே போதனை மொழியாக நீடித்தது.

பின், 1944ல் ஜான் சார்ஜன்ட் என்பவர் தலைமையில் 'மத்தியக் கல்வி ஆலோசனை சபை' ஒன்று நிறுவப்பட்டது. அதன் சிபாரிசுப்படி, பாரதம் முழுவதும் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் தாய்மொழி போதனைமொழி யாக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலே, காந்தியடிகள் போன்ற பெருந்தலைவர்கள், தாய்மொழியே கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் போதனை மொழியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். காங்கிரஸ் மகாசபை ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்து இந்திய மொழிகளுக்கு உரிமை தேடுவதைத் தன் கொள்கையாகவே கொண்டது. அவ்வகையில், காங்கிரஸின் மாநிலங்களை மொழிவாரி பிரித்து, மாநில காங்கிரஸ் நடவடிக்கைகளை, அந்தந்த மாநில மொழியிலேயே நடத்தி வந்தது. விடுதலை பெற்ற பாரதத்தில்—மாநிலங்களில் ஆட்சி மொழியாக, கல்லூரிகளில் பயிற்சி மொழியாக, நீதி மன்றங்களில் நிர்வாக மொழியாக மாநில மொழியே பயன்படுத்தப் படுமென்றும், மத்தியில் இந்திமொழி ஆட்சிமொழி யாகுமென்றும் காங்கிரஸ் மகாசபை தொடர்ந்து தீர்மானங்கள் வாயிலாகவும் தேர்தல் பிரகடனங்கள் வாயிலாகவும் மக்களுக்கு உறுதிகூறி வந்தது.

இதற்கு முன் மாதிரியாக, 'தேசியக் கல்வித் திட்டம்' என்பதாக ஒன்றை வகுத்து, அதில் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தாய் மொழிக்கே பிரதான இடமளித்தனர் பாரதப் பெருந்தலைவர்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த, ஆமதாபாத்தில் குஜராத் வித்யா பீடத்தைத் தோற்றுவித்தார் காந்தியடிகள்.

அதில், எல்லா பாடங்களுக்கும் குஜராத்தி மொழியே போதனுமொழி யாக்கப்பட்டது.

பண்டித மதன் மோகன் மாளவியா, தமது பெரு முயற்சியால், காசியில் ஒரு பல்கலைக் கழகத்தைத் துவக்கினர். அதில், தாய்மொழிக்கு சிறப்பிடம் தரப் பட்டது.

ஹைதராபாத்தில் நிஜாம் அரசரால் 'உஸ்மானியா பல்கலைக் கழகம்' தோன்றியது. அதில், பொறியியல், மருத்துவம் உள்பட எல்லா கலையியல்—தொழியியல் பாடங்களுக்கும் உருது மொழியே போதனுமொழியாக் கப்பட்டது.

புனுவில், டாக்டர் கார்வே அவர்கள் முயற்சியால் பெண்கள் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அங்கும், தாய் மொழியே எல்லாப் பாடங்களுக்கும் போதனு மொழியாக்கப்பட்டது.

இவை மட்டுமன்றி, தேசிய எழுச்சியின் விளை வாக, ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி காட்டுத் தீ போல் பாரதமெங்கும் பரவியதால், வேறு பல பல் கலைக் கழகங்களிலும், குறைந்த அளவிலேனும் தாய் மொழிக்கு சிறப்பு தரப்பட்டது.

1947ல் பாரதம் சுதந்தரம் பெற்ற பின்னர், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக்கிளர்ச்சியில், திருப்திகரமானதொரு திருப்பம் ஏற்பட்டது. ஏன்? கல்வி முறையிலும் தேசிய மணங்கமழ வாய்ப்பு ஏற்பட்டது.

1948 ல்—சுதந்தரம் பெற்ற—சில மாதங்களில் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில், "பல் கலைக்கழகக் கல்விக் கமிஷன்" ஒன்றை நியமித்தது பாரத அரசு. அந்தக் குழு 1949 ல் தன் அறிக்கையை வெளியிட்டது. அதில், எல்லாக் கல்லூரிகளிலும்—எல்லாப் பாடங்களுக்கும் தாய்மொழியே போதனு மொழியாக்கப்பட வேண்டும்" என்று சிபாரிசு செய் யப்பட்டது.

1954 ல் மத்திய அரசினர், 'பல்கலைக் கழக மான் யக் கமிஷன்' ஒன்றை நியமித்தனர். அதுவும்,

கல்லூரிப் பாடங்களைத் தாய் மொழியிலேயே போதிக்க வேண்டும் என்று அறிக்கை சமர்ப்பித்தது.

தாய்மொழியைப் போதன மொழியாக்க வேண்டுமென்பதில் மத்திய—மாநில அரசுகளேயன்றி, வட இந்தியாவிலுள்ள சில பல்கலைக் கழகங்களும் 1947க்குப் பிறகு அதிக ஆர்வங் காட்டின.

1941 செப்டம்பரில்—ஸ்ரீநகரில் கூடிய அகில இந்தியக் கல்வி மாநாட்டில், "கல்லூரிப் பாடங்கள் அனைத்தும் தாய் மொழியிலேயே போதிக்கப்பட வேண்டும்" என்னும் தீர்மானத்தை ஸ்ரீமந் நாராயண் அகர்வால் பிரரேபிக்க, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

வட இந்தியப் பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு விழாக்களில் பேருரை நிகழ்த்திய பேரறிஞர்களில் பலர், போதன மொழி தாய்மொழியாக இருக்க வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளனர். அவர்களில் ராஜாஜியும் ஒருவர். அவரது கருத்துக்களை "பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள நூலில் காணலாம்.

1963 பிப்ரவரி 7ல் பம்பாய் நகரில் கூடிய 37 பல் கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் "ஆங்கிலம் போதன மொழியாக இருக்கும் நிலைமாறி, பிரதேச மொழிகள் போதன மொழியாக வரும் நிலை எக்காரணங்கொண்டும் தவிர்க்க முடியாத தாகும்" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

சீனப் படையெடுப்புக்கு முன்பு பிரதமர் நேரு தலைமையில் கூடிய தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில், கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தாய்மொழி யையே போதனமொழி யாக்குவதன் வாயிலாகத்தான் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியும் என்று தீர்மான வாயிலாக வற்புறுத்தப்பட்டது.

தேசிய ஒருமைப்பாடு மாநாட்டால் திரு. சம்பூரணானந்தர் தலைமையில் நியமிக்கப்பட்ட 'கல்விக்குழு'வின்

அறிக்கையிலும், "தாய்மொழியை கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் போதன மொழியாக்குவதன் மூலம் தான் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1939ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் பம்பாயில் கூடிய அகில இந்திய பல்கலைக் கழகங்களின் மாநாட்டில், "கல்வித் துறையின் பல்வேறு நிலைகளிலும்—பட்டப்படிப்பு உள்பட—மாணவர்களின் தாய்மொழியிலேயே பாடங்களைப் பயிற்றுவிக்க வேண்டும்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தை மட்டும் தனியே நோக்கினால், பாரதம் சுதந்தரம் பெறுவதற்கு முன்னும் பின்னும் ஆங்கில ஆதிக்கத்தை அகற்றி, அதன் இடத்தில் தாய் மொழியை அமர்த்த தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வந்துள்ளன. இதற்கு சென்னைப் பல்கலைக் கழகமும் விலக்காக இல்லை.

1926 லேயே "விரும்புகின்ற கல்லூரிகள் தாய் மொழியைப் போதன மொழியாகச் செய்யலாம்'' என்பதாக, சென்னைப் பல்கலைக் கழக செனட் சபை தீர்மானித்தது. ஆனால், அதனை நடைமுறைக்குக் கொண்டு வர அது முயலவேயில்லை.

1939 ல் சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் சபை "இடை நிலை வகுப்புகளிலும் பட்டப் படிப்பு வகுப்புகளிலும் விரும்புகின்ற கல்லூரிகள் தாய்மொழியைப் போதன மொழியாக்கலாம்'' என்பதாகத் தீர்மானித்தது. இதுவும், நடைமுறைக்கு வரவில்லை.

1943 ல் சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட், "மாணவர்கள் ஓராண்டு முன்னறிவிப்பு கொடுத்து, இடைநிலை வகுப்பு மூன்றுவது பாகத்தில் அடங்கியுள்ள பாடங்களை மட்டும் இந்திய மொழி ஒன்றில் எழுத விரும்பினால், அனுமதி அளிக்கப்படும்—வசதி செய்து தரப்படும்'' என்பதாகத் தீர்மானித்தது.

இந்தச் சலுகை பி. ஏ. பட்டத்திற்குப் படிக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்று 1948 ல் கூடிய சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் தீர்மா

ளித்தது. இதெல்லாம் வெறும் கண்துடைப்புதான்! காரியத்தில் மாறுதல் எதுவும் நிகழவில்லை!

இவையன்றி, அகில இந்திய ரீதியில் நடைபெற்ற பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாடுகளில் கலந்துகொண்டும், 1948-ல் அமைக்கப்பட்ட பல்கலைக் கழக கல்விக் கமிஷனில் அங்கம் வகுத்தும், தாய்மொழியைப் போதனு மொழியாக்க வேண்டுமென்ற முடிவுகளுக்கு ஆதரவளித்து வந்திருக்கிறார், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலியார்.

ஆனால், அகில இந்திய நிறுவனங்களின் தீர்மானங்களையோ, தானே நிர்வகிக்கும் சென்னை பல்கலைக் கழக செனட் சபை—சிண்டிகேட் சபை தீர்மானங்களையோ செயல்படுத்துவது பற்றி டாக்டர் ஏ. எல். முதலியார் சிந்தித்தது கூட இல்லை.

மாநில அரசாங்கம், சென்னைப் பல்கலைக் கழகத்தைப்போலல்லாமல், கொஞ்சம் முற்போக்காக நடந்து கொண்டு வந்துள்ளது.

1938 ல்—ராஜாஜி அமைச்சரவையின் போது—கல்வியமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன், உயர் நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதனு மொழியாக இருந்ததை அகற்றி, அதற்குப் பதிலாக தமிழைப் போதனுமொழி யாக்கினார். அப்போது, சென்னை அரசாங்க கல்வி இலாகா டைரக்டராக இருந்த மிஸ்டர் ஸ்ட்ராதம் என்பவர் வெளியிட்ட அறிக்கையில், "அடுத்த கட்டத்தில் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழியாக்கப்படும்" என்று உறுதி கூறினார்.

இது, மெக்காலே கல்வித் திட்டத்திற்கு விழுந்த முதல் அடி!

பின், 1946 ல்—ஆந்திரகேசரி பிரகாசம் அமைச்சரவையின் போது—கல்வியமைச்சராக இருந்த திரு டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்கள், கோவை அரசினர் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக்கினார். ஆனால், ஆயத்த ஏற்பாடுகள் திருப்திகரமாக செய்யப்படாததால், அந்த முயற்சி தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

1948ல், ஆரம்பப் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதலே ஆங்கிலம் போதிக்கப்பட்ட நிலையை அகற்றி, 6ஆம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் கற்பிக்க ஆணை யிட்டது சென்னை மாநில அரசு.

இது, மெக்காலே கல்வித் திட்டத்திற்கு விழுந்த இரண்டாவது அடி!

1960 ஆம் ஆண்டில், காமராசர் அமைச்சரவை யில் கல்வி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணி யம், தமிழகத்திலுள்ள கலைக் கல்லூரிகள் அனைத்திலும் —பி. ஏ. பட்டப் படிப்புக்கு மட்டும்—1963 முதல் தமிழைப் போதன மொழியாக்கப் போவதாக அதிகார பூர்வமாக வெள்ளையறிக்கை வெளியிட்டார்.

முன்னோடியாக, 1960 ல் கோவை அரசினர் கல்லூரியில் தமிழ் பயிற்சிமொழி யாக்கப்பட்டது.

அது வெற்றி பெற்றதால், தொடர்ந்து பொள் ளாச்சி கல்லூரி, கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை அவிநாசிலிங்கம் குடும்பக் கலைக் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு தமிழ் பயிற்சி மொழித் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

1962 லும் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்க பல தனியார் துறைக் கல்லூரிகள் முன் வந்தன.

இந்த முறை தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் வெற்றி நடை போடக் காரணம், அதற்கான ஏற் பாடுகளை கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் திறம் படச் செய்திருந்ததுதான்.

> தமிழ் வளர்ச்சி — ஆராய்ச்சிக் கழகம் அமைத்து, அதில் ஆங்கில—தமிழ் அறிஞர்களை யும், அரசியல் கட்சிகளின் தலைவர்களையும், பேராசிரியர்களையும் சேர்த்து, அவர்களுடன் விவாதித்து, தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை உருவாக்கினர்.
>
> அந்தத் திட்டத்தை, சென்னை—அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அனுப்பி, அவர்கள் கூறிய திருத்தங்களை

ஏற்று, அவர்களுடைய அங்கீகாரத்தோடு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

கல்லூரிப் பாடப் புத்தகங்களை வெளியிடுவதற்கென "தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்" ஒன்றைத் தனியே அமைத்து, பல்வேறு கலைநூற்களைத் தொடர்ந்து வெளியிட்டு வர, பல லட்சம் ருபாய்களை மான்யம் கொடுத்தார்.

தமிழ் போதனு மொழித் திட்டத்தின்படி பி. ஏ. வகுப்பில் சேரும் மாணவர்களை உற்சாகப் படுத்த பலவிதமான சலுகைகள் வழங்கினுர்.

ஆண்டுதோறும் கல்லூரி திறக்கப்படும் பருவத்தில், கோவையில் தமிழ் பயிற்சி மொழி மாநாடு கூட்டச் செய்து, அதில் தாமும் கலந்து கொண்டு, தமிழ் பயிற்சி மொழி வகுப்பில் சேருமாறு மாணவர்களை உற்சாகப்படுத்திப் பேசி வந்தார்.

மற்றும், கல்வி—கலை சம்பந்தப்பட்ட கூட்டங்களில் தாம் பேசும் போதெல்லாம், தமிழ் போதனு மொழிக் கொள்கைக்கு ஆதரவாகப் பிரசார பேரிகை கொட்டி வந்தார்.

தமிழ் போதனு மொழித் திட்டத்தின்படி பி. ஏ. வகுப்பில் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெற்ற பின்னர், அவர்களுக்கு வேலை தருவதில் அரசாங்கம் அனுதாபத்துடன் நடக்கும் என்று உறுதி கூறினுர்.

ஆண்டுதோறும், தமிழ் பயிற்சி மொழித் திட்டப்படி படிக்கும் மாணவர்களின் அறிவுத் திறனை —குறிப்பாக, ஆங்கிலத்தில் அவர்கள் பெற்றுள்ள திறமையை ஆராய்ந்து அறிந்து அறிக்கைதர சென்னை—மைசூர்—திருவனந்தபுரம் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த பேராசிரியர்கள் கொண்ட "தமிழ் பயிற்சி மொழித் திட்ட மதிப்பீட்டுக் குழு"வை நியமித்தார்.

இத்தனைச் சிறப்பான ஏற்பாடுகள் காரணமாக, தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் வெற்றிநடை போட்

டது. தற்போதைய கல்வியமைச்சர் திரு எம். பக்த வத்சலம் அவர்கள் கூட, "தமிழ் பயிற்சி மொழித் திட்டம் வெற்றிகரமாக முன்னேறி வருகிறது" என்று கூறியுள்ளார்.

இதுகாறும், ஆங்கில மொழி பாரதத்தில் ஆதிக்கம் பெற்ற விதத்தை—பின், அதன் ஆதிக்கத்தை அகற்ற சுதந்தர பாரதம் மேற்கொண்ட நடவடிக்கைகளை விரிவாக அறிந்தோம்.

நம் தாயகமான தமிழகம், ஆங்கில ஆதிக்கத்தை அகற்றும் முயற்சியில் முன்னேறிக் கொண்டிருந்த தருணத்தில், தமிழ் செய்த தீவினையாலோ, தமிழ் மக்கள் செய்த பாவத்தாலோ, திரு. எம். பக்தவத்சலம் தமிழகத்தின் கல்வியமைச்சரானார்—அவ்வளவுதான்!

"ஆங்கிலம், ஆரம்பப் பள்ளிகளில் 3-ஆம் வகுப்பு தொடங்கியே போதிக்கப்பட வேண்டும்" என்று ஆணையிட்டு, அமுல் நடத்துகிறார்.

தனியார் துறை உயர் நிலைப் பள்ளிகளின் நிர்வாகிகள் விரும்பினால், ஆங்கிலத்தைப் போதனாமொழியாக்கிக் கொள்ள அனுமதி வழங்கப்படும் என்று அறிவித்தார். அதற்கிணங்க, ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான உயர்நிலைப் பள்ளிகளில், போதனா மொழி தமிழாக இருந்ததை, ஆங்கிலமாக மாற்றி வருகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத்திற்குரிய பீரியடுகள் (பாட போதனை நேரம்) குறைக்கப் பட்டும், ஆங்கில மொழி போதனைக்கான நேரம் கூடுதலாக்கப்பட்டும் உள்ளன.

1963 ல் தமிழ் நாட்டுக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழே போதனா மொழியாக்கப்படும்—என்று 1960 ல் தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை யறிக்கையை நிறைவேற்ற மறுத்ததோடு, முன்னோடியாக சில கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த தமிழ் போதனா மொழி வகுப்புகளையும் அடியோடு கைவிடச் செய்து விட்டார் கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலம்.

வட பாரதத்தில் 37 பல்கலைக் கழகங்களில்—அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கல்லூரிகளில் மாநில மொழியே போதனு மொழி யாக்கப்பட்டு வருகின்றன.

குஜராத் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் (மெடிகல்), பொறியியல் (என்ஜினீயரிங்) ஆகிய விஞ் ஞான ரீதியான தொழில் நுட்பப் பாடங்கள் உள்பட எல்லாப் பாடங்களும் குஜராத்தி மொழியில் போதிக்கப் படுகின்றன.

குஜராத், மராத்தி, வங்காளம் ஆகிய மாநிலங் களில் அரசாங்க கெஜட் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்படுகின்றன.

தமிழ் நாட்டில் மட்டும் "எங்கெங்கும் ஆங்கிலம்" என்ற நிலை நீடிக்கிறது; அதை, "என்றென்றுமே ஆங்கிலம்" என்றும் செய்துவிட முயல்கிருர் திரு. பக்தவத்சலனுர்.

ஆம்; திரும்பவும் ஒன்றேகால் நூற்ருண்டுக்கு முன்பு—அதாவது, 1835 ஆம் ஆண்டில் நடை முறைக்கு வந்த லார்டு மெக்காலே திட்டத்திற்கு தமிழ் நாட்டை இழுத்துச் செல்கிருர்—இல்லை, இழுத்துச் சென்று விட்டார், தற்போதைய கல்வி அமைச்சர் திரு. பக்தவத்சலனுர்.

இந்தக் கொடுமையை எதிர்த்து, ஆங்கில ஆதிக் கத்தை அகற்ற—இல்லை, அழித்து முடிக்க தாய் மொழிப் பற்றுடைய தமிழரெலாம் படை திரள்வோம்!

அதற்கு உதவியாக, சரியாக ஒரு நூற்ருண்டுக்கு முன்பு வாழ்ந்த மாயூரம் வேதநாயகனுர் உள்பட அறிஞர் பெருமக்கள் பலர் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக தெரிவித்துள்ள கருத்துக்களையும் படித்து, ஆங்கில ஆதிக்கத்தை அழிக்க ஆற்றல் பெறுவோ மாக!

கவிஞர்கள்

மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை

(1826—1889)

[இவர், தமிழில் கவிதைகள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் இயற்றிய கவிதைகள் "சர்வ சமய சமரசக் கீர்த்தனை" என்னும் பெயரில் நூல் வடிவில் வெளி வந்துள்ளன. வேதநாயகர், மாவட்ட நீதிபதி (முனிசீப்) பதவியில் இருந்து பணிபுரிந்திருக்கிறார். மாயூரம் நகர மன்றத் தலைவராகவும் இருந்திருக்கிறார். தமிழில் "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நாவல் இயற்றி, தமிழ் உரைநடைக்குச் சிறப்பு தேடியுள்ளார்.]

ஆங்கிலம் ஒன்றையே கற்றார்; தங்கள்
 ஆவியொடு ஆக்கையை விற்றார்
தாங்களும் அன்னியர் ஆனார் இன்பத்
 தமிழின் தொடர்பற்றுப் போனார்.

தமிழகக் கோர்ட்டுகளிலே தமிழ் வக்கீல்கள் தமிழில் வாதிக்காமல், ஆங்கிலத்திலே வாதிக்கிறார்கள். தேச மொழியும் தமிழ்; கோர்ட்டிலே வழங்குகிற மொழியும் தமிழ்; நியாயாதிபதியும் தமிழர்; வாதிக்கிற வக்கீலும் தமிழர்; கட்சிக்காரர் தமிழர்—எல்லாம் தமிழ் மயமாகயிருக்க, யாருக்குப் பிரீதியாக அவர்கள் ஆங்கிலத்தில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை.

நியாயாதிபதி அல்லது வக்கீல் ஆங்கிலராய் இருந்தால் ஆங்கிலத்திலே வாதிப்பது நியாயம். தமிழ் நியாயாதிபதி முன், தமிழ் வக்கீல் ஆங்கிலத்திலே வாதிப்பது ஆச்சரியமல்லவா?

தமிழ் வக்கீல்கள் தாய் மொழியைத் தள்ளிவிட்டு அந்நிய மொழியிலே வாதிப்பது அசந்தர்ப்பமல்லவா?

தமிழ் நன்ருகத் தங்களுக்குப் பேச வராது என்று கௌரவம் போலச் சொல்லிக் கொள்ளுகிருர்கள். இதனினும் இழிவு வேறென்றில்லை.

சட்ட நூல்கள் ஆங்கிலத்திலே அமைந்து கிடப்பதாலும், சட்ட நுணுக்கங்களுக்குரிய சரியான பதங்கள் தமிழிலே இல்லாமையாலும் தாங்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதாகச் சிலர் சொல்லுகிருர்கள். அது அறியாமையே; உண்மையல்ல. தமிழ் நூல்களைத் தக்கபடி ஆராய்ந்தால் பதங்கள் அகப்படாமற் போகா. இரண்டொரு குழூஉக் குறிகளுக்குத் தமிழ் சொற்கள் இல்லையென்ருல் அவற்றை மட்டும் ஆங்கிலத்திலே வழங்கினுல் அவர்களை யார் கோபிக்கப் போகிருர்கள்!

தமிழ் நியாயாதிபதிகளும் வக்கீல்களும் தாங்கள் பயின்ற ஆங்கிலம் மறந்து போகாதிருக்க அதை வழங்கி, நியாய பரிபாலனத்தைக் குளறுபடி செய்வது ஒழுங்கா?

விசாரணைகள், தீர்ப்புகள், அபராதங்கள், ஆக்கினைகளை அனைவரும் அறிவது நல்லதல்லவா? விவகாரங்களைக் கேட்டு, அதனுல் விவேகம் அடைவதற்காகக் கோர்ட் வாசல்களிலே மக்கள் கூடுகின்றனர். ஆனுல், அவர்களுக்குப் புரியாத மொழியிலே விவகாரம் நடப்பதால் குருடன் கூத்துப் பார்க்கப் போன கதையாய் முடிகிறது.

சுருங்கச் சொன்னுல், தமிழ் நியாயாதிபதி முன் ஆங்கிலத்திலே வாதிக்கின்ற தமிழ் வக்கீல்கள் தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் அவமதிக்கிருர்கள்.

ஒவ்வொரு வழக்கிலும் உண்மையைக் கண்டு பிடித்து நீதி வழங்குவது கோர்ட்டார் கடமை. தாய் மொழியிலே கோர்ட் நடவடிக்கைகள் நடந்தால் மட்டுமே உண்மை வெளியாகுமே யன்றி, மக்களுக்குப் புரியாத மொழியில் நடந்தால் எப்படி உண்மை வெளியாகும்?

சிலர் ஆங்கிலம், இந்தி முதலிய பிற மொழிகளைப் படிக்கத் தொடங்கி, அந்த மொழியுந் தெரியாமல், பேசத் தெரியாதவர்களாய் விடுகிறுர்கள். இவர்கள் பிற மொழிகளில் முழு அறிவுடையவர்களாக இருந்தும் சொந்த மொழியைப் படிக்காமல் இடை வழியில் விட்டு விடுகிறுர்கள்.

வக்கீல்கள் ஆங்கிலத்தில் வாதிப்பது அக்கிரமம் என்று சில தமிழ் நியாயாதிபதிகளுக்குத் தெரிந்திருந்தும் அதைக் கண்டித்தால், தங்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்று மற்றவர்கள் நினைப்பார்களே என்று ஆங்கில வாதத்திற்கு இடம் கொடுத்திருக்கிறுர்கள். நடவடிக்கைகளையும் அவர்கள் ஆங்கிலத்திலேயே நடத்துகிறுர்கள். சில சமயங்களிலே நியாயாதிபதியும் வக்கீலும் ஆங்கிலத்தை நன்ருகப் படியாதவர்கள். அதனுல் ஒருவர் சொல்வது ஒருவருக்குத் தெரியாமல் கைச் சண்டை செய்து சங்கடப்படுகிறுர்கள். கோர்ட்டுகள் நாடக சாலையாகத் தோன்றுகின்றன.

சொந்த மொழியில் பிழை இல்லாமல் இரண்டு வரி சேர்த்தெழுதத் தெரியாமலும் தங்களுடைய பெயர்களையே ஒழுங்காக எழுதத் தெரியாமலும், 'வைத்திய நாதன்' என்பதற்குப் 'பைத்திய நாதன்' என்று கையெழுத்துப் போட்டுக்கொண்டு உயிர் வாழ்கிறுர்கள்.

ஐரோப்பாக் கண்டத்தில் தன்னுடைய கையெழுத்தையே பிழையற எழுதத் தெரியாதவனுக்கு ஒரு அலுவலும் கிடைக்காது.

பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பயின்று விட்டுத் தாய் மொழியாகிய தமிழை அறியாதவர்கள் மாதா வயிறெரிய மகேசுவரி பூஜை செய்பவர்களுக்கொப்பாவார்கள்.

தமிழைப் புறக்கணிப்பவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியதை உடையவர்கள் அல்ல. அவர்கள் எந்த ஊர் பாஷையைப் படிக்கிறுர்களோ, அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடம்.

['மாயூரம் வேதநாயகர்' என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டவை.]

மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி யென்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினுல், அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக்கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூரண ஸஹாயத்தை எதிர்பார்க்கவேண்டுமாஞல், இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதை தம்பட்டம் அறைவிக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக!

தேச பாஷை மூலமாகவே சரித்திரப் படிப்பு மட்டுமன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்கு தேசியக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடு மன்றோ?

பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில், மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைகளுக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். திருஷ்டாந்தரமாக, "ஆக்ஸிஜன்", "ஹைட்ரஜன்" முதலிய ப(தார்த்)தங்களுக்கு ஏற்கனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருத பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு

மட்டுமேயன்றிக் கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ் சமஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தலாம். ஆனால், குணங்கள், செயல்கள். நிலைமைகள்—இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறுவகையால் உணர்த்த இயலாவிடின்.

தேசத்தின் வாழ்வுக்கும் மேன்மைக்கும் தேசியக் கல்வி இன்றியமையாதது. தேசியக் கல்வி கற்றுக் கொடுக்காத தேசத்தை தேசம் என்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடிவாழும் விஸ்தாரமான சுடுகாடேயாம்.

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி கற்பிக்க வேண்டுமானல், அதற்குத் தமிழே தனிக் கருவியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இங்கிலீஷ் படித்த வக்கீல்களும், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும், தமது நீதி ஸ்தலங்களையும் பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறினவுடனே, இங்கிலீஷ் பேச்சை விட்டு தாம் தமிழர் என்பதை அறிந்து நடக்கவேண்டும். பந்தாடும்போதும், சீட்டாடும் போதும், ஆசாரத்திருத்த சபைகளிலும், வருணசிரம சபைகளிலும், எங்கும், எப்போதும், இந்தப் "பண்டிதர்கள்" இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினல், உடனே தேசம் மாறுதலடையும்.

['பாரதி-கட்டுரைகள்' என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.]

ஆங்கிலக் கல்வி

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்இசைப் பாண்டிய சோழர்கள்
பார் அளித்ததும் தர்மம் வளர்த்ததும்,
பேர்அருட்சுடர் வாள்கொண்டு அசோகனுர்
பிழைபடாது புவித்தலங் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்,

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்(து)
ஆங்கி லம்பயில் பள்ளியுள் போகுநர்;
என்ன கூறிமற்று எங்ஙன் உணர்த்துவேன்
இங்கு இவர்க்குஎன(து) உள்ளம் எரிவதே.

சூதி லாத உளத்தினன் எந்தைதான்
சூழ்ந்து எனக்கு நலஞ்செயல் நாடியே
ஏதி லார்தரும் கல்விப் படுகுழி
ஏறி உய்தற்(கு) அரிய கொடும்பிலம்
தீதி யன்ற மயக்கமும் ஐயமும்
செய்கை யாவினு மேயசி ரத்தையும்
வாதும் பொய்ம்மையும் என்ற விலங்கினம்
வாழும் வெங்குகைக்கு என்னை வழங்கினன்

'ஐயர்' என்றும் 'துரை' என்றும் மற்றுனெக்(கு)
ஆங்கிலக் கலை என்றுென்(று) உணர்த்திய
பொய்யருக்கு இது கூறுவன் கேட்பீரேல்;
பொழுதெலாம் உங்கள் பாடத்தில் போக்கி

நான்

மெய் அயர்ந்து விழிகுழி வெய்திட
வீறி ழந்தென துள்ளம் நொய் தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கிஎன்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்

செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது;
தீது எனக்குப்பல் ஆயிரம் சேர்ந்தன;
நலம்ஓர் எள்துணையுங் கண்டிலேன் இதை
நாற்பது ஆயிரம் கோயிலில் சொல்லுவேன்!

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

கவி. ரவீந்திரநாத தாகூர்

[தாகூர், தம் தாய்மொழியான வங்க மொழியில் மட்டுமன்றி, ஆங்கில மொழியிலும் கவி பாடியுள்ளார். உலகநாடுகளில் சுற்றுலாச் செய்து, அந்தந்த நாடுகளில் அரசாங்க ரீதியில் கௌரவிக்கப்பட்டுள்ளார். 'கல்வி கற்பிக்கும் பாஷை' என்ற தலைப்பில், 'மார்டன் ரெவியூ' என்ற பத்திரிகையில் தாகூர் எழுதிய கட்டுரையின சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. மொழி பெயர்ப்பு மகாகவி பாரதியாருடையதாகும்.]

கல்வியைப் பரப்புதல் என்ற விஷயத்தைக் கவனிக்கப் புகுமிடத்தே, முதல் கஷ்டம் இங்கிலீஷ் கருவியாக (போதனு மொழியாக) இருத்தல் என்று காண்கிறோம்.

நம்முடைய தாய்ப் பாஷையில் உயர்தரக் கல்வி கற்பித்து அக்கல்வியை முழுதும் நம்மதாக்கிவிட வேண்டுமென்று சொல்லும் தைரியம் நமக்கெப் போதுமே வாராது போகுமா ?

ஜப்பான் தனக்கு வேண்யடிதை மேற்குத் திசையிலிருந்து பற்றிக் கொண்டதன் காரணம் யாது? அதுவும் இத்தனை சீக்கிரத்தில்? அவள் மேற்குக் கல்வியைத் தனது பாஷையில் சிறைப்படுத்திக் கொண்டாள். ஜப்பானிய பாஷை நமது பாஷையைக் காட்டிலும் சொல் வளமுடையதென்று நினைக்கிறீர்களா ?

ஐரோப்பிய சாஸ்திரம் ஜப்பானியருக்கு எத்தனை அந்நியமோ அத்தனை நமக்கன்னியம் அன்று. ஆனுல் ஜப்பான் பிரதிக்ஞை செய்து கொண்டாள்: "நமது பாடசாலைகளில் ஐரோப்பிய சாஸ்திரத்தை நிலைநிறுத்தக் கடவோம்'' என. அவள் அங்ஙனம் சொல்லியது மட்டுமன்று, செய்து காட்டினுள். பயனை நுகர்கிருள். உயர்தரக் கல்வி நமது பாஷை மூலமாகக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால் மாத்திரமே அக்கல்வியால் நமது நாட்டுக்குப் பயனுண்டாகுமென்

றும் சொல்லக்கூட நமக்கு இன்னும் தைரியம் பிறக்க வில்லை.

நாம் இங்கிலீஷ் பாஷையையும் படிக்க வேண்டு மென்றும் கூறுதல் மிகை. அதுவும் கேவலம் ஜீவ ஞார்த்தமாக மாத்திரம் செய்யக்கூடாது. இங்கிலீஷ் மாத்திரமேன்? ப்ரெஞ்ச் பாஷையும் ஜெர்மன் பாஷை யும் படித்தால் இன்னும் விசேஷம்.

எதிர் விவகாரம் என்ன சொல்வார்களென்பதை நானறிவேன். "வங்காளி பாஷையில் உயர்தரக்கல்வி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீரேங்காணும்! அந்தப் பாஷையில் பாடப் புத்தகங்கள் இல்லையே" என்று கேட்பார்கள். அந்தப் பாஷையில் பாடப் புத்த கங்கள் இல்லையென்பதை நானறிவேன். ஆனல் அந்த பாஷையில் உயர்தரக் கல்வி கற்பிக்கத் தொடங்காவிட் டால் பாடப் புஸ்தகங்கள் எங்கிருந்து வரும்? அவை ரஸங்களைக் கருதி ரஸிகர்களாலே பயிர் செய்யப்படும் அலங்காரச் செடிகளல்லவே! உயர்தரக் கல்வி பாட புஸ்தகங்களுக்காகக் காத்திருந்தால், தழைக்குப் பின் நான் தோன்றுவேனென்று மரம் காத்திருக்கும். கரைக்குப் பின் நான் தோன்றுவேனென்று நதி காத் திருக்கும்.

—**'தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள்'.**

பாவேந்தர் பாரதிதாசன்

வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில்
ஆங்கிலமா வேண்டும்?
வானுயர்ந்த செந்தமிழால்
வரைக என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!
ஆணி விற்போன் முதலாக
அணிவிற்போன் ஈருக
அனைவர் போக்கும்

நாணமற்ற தல்லாமல்
நந்தமிழின் நலங்காக்கும்
செய்கை யாமோ?

உணவுதரு விடுதிதனைக்
'கிளப்'என வேண்டும் போலும்
உயர்ந்த பட்டுத்

துணிக்கடைக்கு 'சில்குஷாப்'
எனும் பலகை தொங்குவதால்
சிறப்புப் போலும்

மணக்க வரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை!

தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை

தமிழ்நாட்டின் உப்பைத் தின்
றீரன்றோ கணக்காயத்
தந்தை மாரே!

தமிழ்நாட்டின் தமிழர்களின்
தன்னுணர்வு நாட்டுவதைத்
தவிர்ப்பீ ராயின்

உமிழாதோ, வருத்தாதோ
உம்மையே உம் மருமை
உள்ளச் சான்றே?

அமுதூட்ட நஞ்சூட்டி
அகமகிழும் தாயுண்டோ
அருமைச் சேய்க்கே?

கல்லூரித் தலைவரை நான்
கேட்கிறேன் கனிதமிழின்
பேரைச் சொன்னால்

சொல்லூறிப் போகாதோ
வாயூறிப் போகாதோ
தாய் தமிழ்க்கு

வல்லூருய் வாய்த்தீரோ
வளம் செய்யும் எண்ணமினி
நீர் பிறந்த

நல்லூரின் நன் மணியாய்
அல்லாது நடந்திடுவோ?
நவில்வீ ரின்றே!

ஐரோப்பியர்

பெசன்ட் அம்மையார்

(1847—1933)

[இவ்வம்மையார், ஐரிஷ் நாட்டினராவார். பாரதம் வந்து, தேச விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்தார். அகில உலக பிரம்மஞான சங்கத்தின் தலைவராகவுமிருந்து உலகப் புகழ் பெற்றார். ஆங்கில மொழியில் ஈடு இணை சொல்ல முடியாத புலமை பெற்றிருந்தார். 1916ல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் அன்னி பெஸண்டு நிகழ்த்திய தலைமையுரையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.]

புதிய அதிகாரங்கள் மக்கள் கையில் ஒப்படைக்கப் படும்போது, அந்த நிலைக்குத் தகுதியுடையவர்களாக அவர்களைச் செய்வதற்கு நாம் பாடுபட வேண்டும். இந்தப் பணியை, ஒவ்வொரு மாநிலத்திலும் வழங்கக்கூடிய மக்களுடைய அறிவுக்கும் மனத்திற்கும் தொடர்புடைய மாநில மொழிகளின் வாயிலாகத்தான் செய்யவேண்டும். இதற்காக, விரைவிலோ சிறிது காலங் கடந்தோ— அநேகமாக விரைவிலேயே— மாநிலங்கள் மொழி அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும். ஆட்சி மொழியும் மாநில மொழியாகவே இருக்க வேண்டும்.

*　　*　　*

[அன்னிபெஸண்ட் அம்மையார், தமிழ் மொழியிலேயே கல்வி போதிக்க வேண்டுமென்று பெங்களூரில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றை விமர்

சித்து தாம் நடத்திய 'இந்தியா' வார இதழில் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியிருந்த குறிப்பு கீழே தரப்பட்டிருக்கிறது.]

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானுல், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷையின் மூலமாகவே கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோ ரெல்லோரும் கொண்டிருக்கிருர்கள். ஆனுல், இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை.

ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்து பிறர் நகைக்கும்படியான அவமான நிலை விரைவில் நீங்கவேண்டுமென்று தேவர்களை வணங்குகின்ருேம்.

[திரு. பெ. தூரன் வெளியிட்டுள்ள 'பாரதி தமிழ்' என்னும் நூலில், பக்கம் 83ல் காணப்படுவது.]

* * *

தாய் மொழி மூலம் கல்வி போதிக்காத காரணத்தால், நாகரிகம் மிகுந்த உலகின் நடுவில், இந்தியா அறியாமை மிகுந்த நாடாகி நிற்கிறது. அதிகம் படித்தறிந்த மக்கள் கார்த்திகைப் பிறையாகவே காணப்படுகின்றனர்; ஆனுல், கல்வியறிவே இல்லாத பாமர மக்களின் எண்ணிக்கையோ பிரம்மாண்டமானது.

[ஸ்ரீமந் நாராயண் அகர்வால் 'தாய் மொழி மூலம் கல்வி' என்னும் தமது நூலில் எடுத்தாண்டுள்ள பெஸண்ட் அவர்கள் கருத்து.]

எச். என். பிரெயில்ஸ் போர்டு

[இவர், உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ்காரர்; பேரறிஞர்; சிறந்த எழுத்தாளர்.]

நம்முடைய இதய எழுச்சிகளுக்கும் உள்ளக் கிளர்ச்சிகளுக்கும் திறவுகோல் ஒரே மொழிதான். வார்த்தையின் தொனியிலே பொதிந்துள்ள நுட்பமான உண்மைகளை வெளிக்கொணர்ந்து நம் மனத்திற்கு உடனே புலப்படுத்தக் கூடிய மொழியும் ஒரே மொழி தான். அந்த ஒரே மொழி, நாம் தாயின் மடியில் தவழ்ந்து கொண்டிருந்த காலத்தில் பேசிய மொழியே.

இறைவனை நோக்கிப் பிரார்த்திப்பதும், இன்பத்திலும் துன்பத்திலும் நம்மை அறியாமலே நம் வாயிலிருந்து வெளிவருவதும் அம்மொழிதான். அம் மொழியை விட்டு வேறு மொழி மூலம் கல்வி புகட்டுவது என்பது மாணாக்கர்கள் மீது தாங்க முடியாத பாரத்தைச் சுமத்துவதோடு, சுதந்திரமாக இயங்குவதிலிருந்து தடைப்படுத்தி மனத்தை முடமாக்கியும் விடுகின்றது.

[ஸ்ரீமந் நாராயண் அகர்வால் இயற்றிய 'தாய்மொழி மூலம் கல்வி' எனும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ள பகுதி.]

டாக்டர் எ. எச். மெக்கன்ஸி

[இவர், மிகச் சிறந்த கல்வி நிபுணர். இலக்குமணபுரி இஸபெல்லா தபோர்ன் கல்லூரி முதல்வராகவும், ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்.]

நூற்களைக் கற்பதனாலும் கற்றவற்றின் பொருள் அறிந்து கற்பதனாலுமே அறிவு வளர்ச்சியுறுகின்றது. இந்தியாவில் பல்கலைக் கழகக் கல்வி முறையில் குறைபாடுகள் காணப்படுவதற்கு முதற் காரணம், கற்ப

வற்றை மாணவர்கள் பொருளறிந்து கற்க இயலாமல் இருப்பதேயாகும். அவர்கள் நிறையக் கற்பதென்னவோ உண்மைதான். ஆயினும், கற்கும் அவையெல்லாம் அவர்கள் உள்ளத்திடையே ஊன்றிக் கிளர்ச்சி கொண்டு எழுந்து பயன்படுமாறில்லை.

கூடைகள் கற்னற கற்றையான குறிப்புகளால் நிறைக்கப்படுவது போல மாணவர்தம் மூளைகள் ஆசிரியர் கொடுக்கும் குறிப்புக்களால் நிறைக்கப்படுகின்றன. எனினும் பெருந்தொகையான மாணவர்களுக்கு அயல்நாட்டு மொழியில் கல்வி பயிற்ற நேருங்கால், ஒவ்வொரு முறையைத்தான் கையாள முடியும். அயல் நாட்டு மொழியின் நுட்பங்களை எளிதில் உணர இயலாமையால், அம் மொழியில் பயில்வோர் அதனைத் தம் உளத்தெழும் கருத்துக்களை யெல்லாம் வெளியிடக் கூடிய கருவியாகப் பயன்படுத்துவதற்கு இயலாதவர் ஆகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் தேர்வுகளில் வெற்றி பெறுவது கருதி மாணவர்கள் தம்மாற் பொருளுணர முடியாதவற்றை யெல்லாம் குருட்டுப் பாடமாக மனப்பாடம் பண்ணவேண்டியவர்களாகின்றனர். கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கும் சொந்தமல்லாத ஒரு மொழியில் கல்வி பயிற்றுவதென்பது, இயற்கைக்கு மாறுபட்டதோர் முறையாகும்.

சீரற்ற இம்முறையால் கருத்துக் குளறுபாடுகள் நேர்கின்றன. புதுக்கருத்துக்களின் எழுச்சி தடைபடுகின்றது. காலமும் ஆற்றலும் பயனின்றிக் கழிகின்றன.

—'செந்தமிழ்ச் செல்வி.'-சிலம்பு 13, பரல் 7.

ஜி. யு. போப்

[இவர், பிரிட்டிஷ் பாதிரியாக தமிழகம் வந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்று புலமை பெற்றதோடு, 'திருவாசகம்' என்னும் அரிய நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தம் கல்லறையில், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிருன்' என்று பொறிக்கச் சொன்னர்.

இவர், தமிழ் மொழியின் சிறப்பு பற்றி இங்கிலாந்தில் நிகழ்த்திய சொற்பொழிவை விமர்சித்து 'சுதேசமித்திரன்' இதழில், அதன் ஆசிரியரும் மாமேதையுமாகிய ஜி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய குறிப்பு இங்கே தரப்படுகிறது.]

பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங்காலமாக வழங்கிவரும் உண்மையாகும். அதன் கருத்து முற்றும் மெய்யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப்பய்யர் லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபையார் முன்பு செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ்டாந்தம் அகப்பட்டது. திருக்குறள், திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷிலே மொழிபெயர்த்தவரும் அநேக இலக்கண நூல்கள் பிரசுரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பைத் தமிழ் நாட்டாரில் பெரும்பான்மையோர் நன்கு அறிவார்கள். இவர் சொல்கிறார் :

> "அனேகர் (அதாவது அனேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் முதலிய பாஷைகளைப் போய்ப் படித்துக் கொண்டு இடர்ப்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தைத் தமிழ் கற்பதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அனேக (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்களுடைய இதழ் நயத்திற்கும், செவிநுட்பத்திற்கும் அபிவிருத்திக்கும் அந்தப் பாஷையைப் போல் எந்தப் பாஷையும் ஒத்துவருவதில்லை"

என்றார். இவர் தமிழ்ப் பாஷையின் இனிமையையும் பெருமையையும் குறித்து எவ்வளவோ சிலாக்கியமாகப் பேசியிருக்கிறார். ஆனால், தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்களோ அந்தப்பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றேனும் சிறிதும் முயல்வதில்லை.

தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களிற் சிறுபாலார், தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது

வைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல், ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்துவிடுகிருர்கள். இவர்கள் தமிழ்ப் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை யும், இவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தை யையும் டாக்டர் போப்பையர் போன்ற ஆங்கிலேயர் கள் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிருர்கள்.

[திரு. ரா. அ. பத்மநாபன் தொகுத்து வெளி யிட்டுள்ள ‘புதையல்’ என்னும் நூலில் (பக். 65) இருந்து எடுக்கப்பட்டது.]

அறிஞர்கள்

விபுலானந்த அடிகள்

[இவர், ஈழ (இலங்கை) நாட்டில் பிறந்து தமிழுலகெங்கும் புகழ்பெற்று விளங்கியவர். ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தைச் சார்ந்திருந்த துறவியாவார். 'யாழ் நூல்' ஆசிரியர்.]

நமது தாய்மொழி தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. அதில் எல்லாக் கலைச் சொற்களையும் ஆக்க வழியுண்டு; அறிஞர் நன்கு ஆராய்ந்து கலைச்சொற்களை அமைக்க வேண்டும்; தமிழில் வெளிவரும் கலைச் சொற்கள் எளிதில் புரிவதில்லை என்று குறைகூறப் படுகின்றது; இன்று புரியாத ஒன்று நாளை புரியும். பழகப் பழக எல்லாச் சொற்களும் எளியவாகிவிடும். ஆதலின் அறிஞராயினுர் முயன்று சிறந்த கலைச் சொற்களை தமிழில் ஆக்குதல் வேண்டும்.

[1936-ல் சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நிகழ்த்திய உரை.]

திரு. பா. வே. மாணிக்க நாயகர்

[இவர் பொறியியல் (என்ஜினீயரிங்) கல்வியில் முதன்மையாகத் தேறி, பின் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டன் சென்ருர். அங்கு பொறியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் பயனுக 'கால்குலோகிராப் (Calculograph for Reinforced Concrete) என்ற புதுமையான கருவியொன்றைக் கண்டு பிடித்தார். பாரதம் திரும்பியதும் முதலில் பொறியியல் கல்லூரிப் பேராசிரியராகவும், பின்

அரசாங்க சூபரின்டெண்டிங் என்ஜினீயராகவும் வேலை பார்த்தார்.

தமிழ், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் புலமை பெற்றிருந்தார் என்பதோடு, தத்துவம்—வானவியல்—விலங்கியல்—புவியியல் முதலிய பல கலைகளிலும் நிரம்பிய அறிவுடையவராக விளங்கினார்.]

மேல் நாட்டவருக்கு இன்றைக்கும் தெரியாத பல இயற்கை யுண்மை நூல்களும் (Natural Sciences) தமிழில் இருக்க வேண்டுமென்று இயற்கை உண்மை அடங்கிய (Philosophic) தமிழ் இலக்கணத்தால் விளங்குகின்றது. அவை, முப்பொருளுண்மை யிலக்கணம், பரமுனை யிலக்கணம், பரவடி யிலக்கணம், ஒலிநிகழ்ச்சி யிலக்கணம், வடிவியற்கை யிலக்கணம், பொருட்டன்மை, உயிரிலக்கணம், வடிவளவை யிலக்கணம், ஒலியளவை யிலக்கணம், உயிர்ப்பிலக்கணம் முதலியவை.

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் தமிழ்மொழியைப் புறக்கணித்ததனால் தங்கட்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டதன்றி, தமிழ்மொழியாகிய செல்வத்தில் பொது உரிமையுடைய உலகத்தினர் மற்றையர்க்கும் தீங்கிழைத்தவராகின்றனர். ஆதலின், முதன்மையாகத் தமிழரும் அவர்களையன்றி கல்வியறிவென்பதில் நன்கு மதிப்புடைய எல்லோரும் அத்தமிழ்மொழிச் செல்வத்தைத் தாங்கள் அடையவும் உலகின் மற்றையோரும் ஒக்க அடையவும் வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாவர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவது விரைவாகவும் கட்டாயமாகவும் வேண்டியது.

['செந்தமிழ்ச் செல்வி', 1934 ஆகஸ்டு–செப்டம்பர் இதழில் வெளியானது.]

கா. நமச்சிவாய முதலியார்

[இவர் தமிழகம் எங்கும் புகழ்பெற்ற பேரறிஞராக விளங்கினுர். பள்ளிக்கூட பாட நூற்களை எழுதியும் வெளியிட்டும் மக்களுடைய கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டு புரிந்தார்.]

சிலர், "விஞ்ஞான சாத்திரங்களில் தமிழ் மொழியில் தக்க சொல்லில்லையே, என் செய்வோம்" என்கின்றனர். கூடியவரையில் தமிழிலே சொற்களை அமைத்துக் கொள்ளலாம். கூடாதனவற்றிற்கு அயல் மொழியிலிருந்தும் பெயர்களை அமைத்துக் கொள்ளலாம்.

ஆங்கிலம் படிப்பவர்கள் விஞ்ஞான சாத்திரங்கள் முதலிய நூற்களை முயன்று எழுதி வெளியிட வேண்டும். அவர்கள் தக்க தமிழாசிரியர்களைத் துணையாகக் கொள்ளுதலே சாலச் சிறப்பாகும். 'எனக்கு ஆங்கிலம் நன்ருகத் தெரியும்; தமிழ் எழுத வராது' என்று சொல்லிக் காலம் கழிக்கின்ற ஆங்கில அறிஞர் பலர். சர்வகலாசாலை ஏற்பட்டு வெளிவந்த பட்டதாரிகள் ஐம்பதினுயிரவருக்கு மேலும் ஆவர். அவர்களில் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த செய்தியைக் குறித்து ஒவ்வொரு சிறு நூல் செய்திருப்பின், ஐம்பதினுயிரம் நூற்கள் ஆகியிருக்குமே! ஒவ்வொருவரும் தம்தம் வயிற்றுப் பாட்டைப் பார்த்தனரே யன்றி, தம் தாய் மொழியின் வளர்ச்சியைக் கருதினுரில்லையே!

[27–9–30-ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய உரை.]

டி. கே. சி.

ஆங்கிலக் கல்வி முறையால் ஆடவர்கள் கெட்டு விடுகிருர்கள். ஆனுல், அக்கல்வியின் மூலம் தாய்மார்கள் கெடுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

ஆடவர்களின் இதயத்தையே கெடுத்து ஏமாளியாக்கி விடுகிற ஆங்கிலக் கல்வி, தாய்மார்களைச்

சும்மா விடுமா. படித்த பெண்களுக்குச் சமைக்கத் தெரியாது; குழந்தைகளைப் பாதுகாக்கத் தெரியாது. எல்லாவற்றையும் விடக் கோடி கோடி ஆண்டுகளாய்த் தொடர்ந்து வருகின்றதுமான தாய்மைத் தத்துவம் இருக்கிறதே அதனுடைய குரல்வளையையே நெரித்து விட்டது இந்த ஆங்கிலப் படிப்பு.

ஆங்கில பாஷையிலே சென்ற நூறு வருஷமாக நாம் கல்வி கற்று வருகிறோம். அது காரணமாகக் கற்கும் விஷயம் நமக்கு நன்றாய்ப் புலப்படுவதில்லை. பத்து நாளில் கற்க வேண்டியதைப் பத்து மாதத்தில் கற்பிக்கிறார்கள்; அப்போதும் கல்வி வந்தபாடில்லை. கற்றவர்களுக்கு நேரில் வருகிற நஷ்டம் இது. சமுதாயத்திற்கு இதனால் ஏற்படுகிற நஷ்டம் ரொம்பவும் பெரிது.

மோட்டார் வண்டிகளை பழுது பார்க்கிற பட்டறை ஒன்றுக்குப் போய்ப் பார்த்தால் போதும். காலேஜுக்களிலே ஸயன்ஸ் வகுப்புக்களில் கற்கிற விஷயத்தை விட நுட்பமான விஷயத்தை,எழுதப் படிக்கத் தெரியாத ஒரு பையன், புதிதாகப் பட்டறையில் வந்து சேர்ந்த மற்றொரு பையனுக்கு விளங்கும்படி எடுத்துச் சொல்லி விடுவான். தமிழில் சொல்லுகிறதனாலேயே இது சாத்தியமாகிறது. கருவிகளின் பெயர்களை ஏதோ "பாட்டரி, மாக்னடோ, வால்வு" என்றெல்லாம் லத்தின், கிரீக்கு, பிரஞ்சு முதலிய பாஷைகளிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு விஷயத்தை விளக்கி விடுகிறான். கருவிகள், உருப்புகள் இவற்றின் பெயர்கள்தான் இதர பாஷைகளிலிருந்து வந்தவை. மற்றபடி பேச்செல்லாம் பேசுகிறவனுக்கும் கேட்பவனுக்கும் நன்றாய்ப் பழகிய வீட்டுப் பாஷையே. ஆங்கிலம் கற்றவர்களுக்கு மாத்திரம் அந்த வீட்டுப் பாஷை வரமாட்டேன் என்று சாதிக்கிறது.

ஆகவே, ஆங்கில முறையில் கல்வி கற்றவர்களுக்கும் அப்படிக் கல்லாத மற்ற நம்மவர்களுக்கும் இடையே ஆங்கில பாஷை சுவர்போல் வந்து நின்று கொள்ளுகிறது என்பது உண்மை. இதைப்பற்றிக் கல்வி முறைகளை ஆராய்ந்த நிபுணர்களான தேச

பக்தர்கள் குறை கூறுகிறார்கள். கடுமையாகப் பேசுகிறார்கள் என்றால், அதில் என்ன குற்றம்?''

['இதய ஒலி' என்னும் நூலிலிருந்து.]

பேராசிரியர் சத்யேந்திர நாத போஸ்

பல்கலைக் கழகங்கள் வரையில் அந்தந்த மாநில மக்களின் தாய்மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்.

தாய் மொழியே பயிற்சி மொழியாவதற்கு இந்தியக் கல்வியாளர்களும் பேராசிரியர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலம் உலகமெல்லாம் பரவிய மொழிதான். சக்திமிக்க மொழிதான். என்றாலும், தாய்மொழிக்கு வேறு ஒரு மொழியும் ஈடாகாது. தாய்மொழியில் கல்வி கற்றுத் தருவதால் விரைவில் அனைவரும் கல்வி பெறுவர். இந்த நாட்டில் அறியாமை, கல்லாமை நீங்குவதற்கு உண்மையாக இருந்த தடைகள் பல. அவைகளில் ஒன்று ஆங்கிலம் போதனா மொழியாக இருப்பதாகும்.

ஆங்கிலம்போதனா மொழியாக இருக்கும் காரணத்தால் கல்வியறிவு பரவாதது மட்டுமல்ல; அதன் காரணமாகவே நாடு தொழில் துறையிலும், தொழில் நுட்ப அறிவிலும் முன்னேறவில்லை. தாய்மொழியில் கல்வி கற்றுத் தருவோமானால், மாணவர்களுக்கு ஆக்கல் முயற்சி ஏற்படும். அன்னிய மொழியில் கல்வி கற்பிப்பது அவர்களது ஆக்கபூர்வமான முயற்சிக்கு இடையூறாக இருக்கிறது.

[1962 மார்ச்சு மாதத்தில் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய பேருரையின் பகுதி.]

டாக்டர் தௌலத்சிங் கொத்தாரி

[இவர், இந்திய அரசினர் நியமித்த பல்கலைக் கழக நிதிக் கமிஷன் தலைவராக இருந்தவர். தற்போது மத்திய அரசினர் நியமித்துள்ள தேசிய கல்விக் கமிஷன் தலைவராவார்.]

விஞ்ஞானக் கல்வியைத் தொடக்கத்திலிருந்தே அந்நிய மொழியில் போதிக்கத் தொடங்கினால், மாணவர்களின் கவனம் விஷயத்தில் செல்லாமல் மொழிக் குழப்பத்திலேயே சிக்கிக் கொண்டிருக்கும். விஷயம் புரியாமல் நெட்டுருப் போட்டாலோ, இருக்கிற அறிவாற்றலும் குன்றிவிடும்.

பல்கலைக்கழக நிதி உதவிக் குழுவின் தலைவனாகப் பதவி பெற்றதற்குப் பிறகும், நான் டில்லிப் பல்கலைக் கழகத்தில் எம். எஸ்ஸி. மாணவர்களுக்குப் பாடம் சொல்லச் செல்வது வழக்கம். சிக்கலான விஷயங்களை ஆங்கில மொழியில் என்னதான் விளக்கினாலும் மாணவர்களுக்குத் தெளிவாவதில்லை. தாய்மொழியில் ஒரு முறை எடுத்துச் சொன்னாலே போதும்; தெளிவும் பொலிவும் அவர்களிடத்திலே மிளிர்வதைக் காண்கிறேன்.

கல்வித் துறையினரும் கல்லூரிகளும் அந்தந்தப் பிரதேச மொழிகளுக்கு ஆக்கமளிக்காதவரை, விஞ்ஞானக் கல்வி பொது மக்களுடன் தொடர்பற்றதாகி விடும். மேலும் பாரதப் பண்பாண்டைச் சரியானபடி வெளிப்படுத்தவும் திறமையில்லாத நிலைமையே நிலவும்.

விஞ்ஞான அறிவு, ஆரம்ப காலத்திலேயே தாய் மொழி மூலம் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அடிப்படை உண்மைகளை முதலில் கசடறக் கற்றுக் கொண்டால்தானே அஸ்திவாரம் வலுவுள்ளதாக இருக்கும். விஞ்ஞானப் பயிற்சி தழைத்து வளர வேண்டிய ஆலமரம் போன்றது. அறிவின் வேர் ஊன்ற நன்ருய்ப் பதமான வளம்மிக்க நிலம் தேவை. தாய்மொழி தான் அத்தகைய விளைநிலமாக இருக்க முடியும்.

திரு. தி.செல்வக்கேசவராய முதலியார்

[இவர், சென்னை பச்சைப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். அறிஞருலகில் புகழ் விளக்காக விளங்கினுர். தாம் எழுதிய 'தமிழ்' என்னும் நூலில் அவர் தெரிவித்துள்ள கருத்து.]

இங்கிலீஷில் மாத்திரம் புலமையடைந்த சிலர், "தமிழென்ன? ஏதாகிலும் சொற்பொழிவாற்ற வேண்டுமானுல், இயல்பாக அது வாக்கில் வருவதில்லை. எழுதப்புகுமிடத்திலும் எழுதுகின்ற சாயலாய் எழுத வருவதில்லை" என்று பழிப்பதுண்டு. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? உண்டதுதானே ஏப்பம் வரும்? இவர்களுக்குத் தமிழில் எவ்வளவு பயிற்சி உண்டோ அவ்வளவுதானே வாக்கு வன்மையும் எழுதும் திறமையும் உண்டாகும்.

இங்கிலீஷில் இல்லாத சிறப்புக்கள் தமிழில் உண்டு. தாய் தகப்பன் பெயர் நீங்கலாக ஏனைய முறைப் பெயர்களெல்லாம் இங்கிலீஷில் தொடர் மொழிகளே. 'அண்ணல்' என்பதை அவர்கள் 'மூத்த சகோதரன் (**Elder Brother**)' என்றும், 'அம்மான்' என்பதைத் தாயுடன் பிறந்தவன் என்றும், அத்தை என்பதைத் தகப்பனுடன் பிறந்தவள் என்றும் இங்கிலீஷில் தொடர் மொழிகளாக வழங்கிடுவர். அவர்களுக்கு வேற்றுமைத் தொகை உவமைத் தொகை இல்லை. நாம் எழுவாயின்றியே கருத்தைக் கூறலாம். அவர்களுக்கு எழுவாயின்றி உரைக்க இயலாது.

தமிழில் ஒருவரைப் பலர்பாலால் வழங்குகின்ற மரியாதை இங்கிலீஷில் இல்லை; வேறொரு பாஷையிலும் இல்லை.

முன்னுல் தமிழர்கள் அனுசரித்து வந்த கீழ்வாயிலக்கமானது இங்கிலீஷில் இக்காலத்து வழங்கும் பின்னம், தசாம்ச பின்னங்களைக் காட்டிலும் மயிரிழை தவருமல் சரியாகக் கணக்கிடக்கூடிய சிறப்பின என்பது இராஜேந்திர சோழன் காலத்துச் சிலாசனமொன்றில் அறிகின்ரேம்.

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்

[இவர், ஆங்கிலத்தில் கல்வி கற்று பி. ஏ. பட்டம் பெற்றவர். ஆங்கிலப் புலமையில் சிறந்து விளங்கியும், தமிழ்ப்பற்று காரணமாக, கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணியை வலுவில் ஏற்ருர். தம் பெயரைப் 'பரிதிமாற் கலைஞன்' எனத் தூய தமிழில் மாற்றிக் கொண்டார்.]

ஆங்கிலங் கற்றுக்கொண்டோரில் சிலர் அவ்வரிய உண்மைகளைத் தம்முடைய தாய் மொழியாகிய தமிழ் மொழியில் வெளியிடுவதற்குரிய ஆற்றலிலராய்த் தம்மவர்க்கும் பயன்படாது வாணுளை வீணுளாகக் கழிக்கின்றனர். பேரறிவாளர்கள் பிற பரவை வழக்குள்ள பாஷைகளின் சரித்திரங்களோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கிச் செவ்வனே ஆராய்ந்து உண்மையைக் கண்டு காலந் தாழ்த்தலின்று உடனே மேற்கொண்டு தமிழ்ப் பாஷை முதிர்ந்து நாகரிக நிலையிலுயர்ந்து முன்னுக்கு வருமாறு செய்வாராக!

"தமிழின் கண்ணே இதற்குத் தக்க சொல்லில; அதற்குத் தக்க சொல்லில்லை" என்று பலவாருக வீண் மொழி பிதற்றி வாய்ப்பறை அறைவதால் யாது பயன்?

ஆங்கில பாஷை கற்ற தமிழ் மக்களிற் பலர் தமது தாய் மொழியாகிய தமிழைப் படிக்க வேண்டியது அவசியமன்றென்றும், தமக்கு வேண்டிய விஷயங்கள் யாவும் ஆங்கிலத்திலேயே அகப்படுகின்றன என்றும் பலதிறப்படக் கூறுவர். அவர் ஆங்கில மொழிச் சிறப்பு மட்டிற் கூறியமைவதே நன்ருகுமன்றித் தமிழ் கற்க வேண்டியது அவசியமன்று என்பது அறியாமையோடு கூடிய துணிந்துரையாம். சுதேசாபிமானமும் சுபாஷாபிமானமும் பெற்றவர் இவ்வாறு கூருர். இவ்விரண்டும் மிக்க ஆங்கிலர் இவ்விரண்டும் அற்றவர்களை எவ்வாறு மதிப்பரோ! ஆங்கிலம் முதலிய பிற பாஷைக்குரியராய் அப்பாஷைகளில் வல்லுனரெல்லாம் தமிழ் மொழியின்மீதார்வமுடையராய்த் தமிழைக் கற்றும், தமிழ் நூல்களைத் தங்கள் பாஷைகளில் மொழி

பெயர்த்துங்கொள்ளுதலே உற்றுநோக்கியாதல்தமிழ்க் கல்வி அவசியமன்று என்பார்க்குப் புத்தி வரட்டும்.''

—'தமிழ் மொழி வரலாறு.'

காகா கலேல்கர்

[இவர், காந்தியடிகளின் பிரதம சீடர்களி லொருவர். சிறந்த கல்விமான்.]

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் தலைவர் கள் தங்கள் சொந்தத் தாய் மொழியிலேயே பேசி மக்க ளுக்கு உற்சாகம் ஊட்டினர். தங்கள் தாய்மொழி குறித்துப் பெருமைப் படும்படியும் மக்களைக் கேட்டுக் கொண்டனர். ஆனால், இந்தியா விடுதலை பெற்ற பின் னர் அதே தலைவர்கள் தங்கள் சொல்லைக் காப்பாற்ற முடியாத நிலைக்கு வந்து விட்டனர். எங்கு பார்த் தாலும் ஆங்கிலத்திற்கு ஆதரவாகவே பேசுகின்றனர்.

ஓட்டுகளைப் பெறுவதற்காக மக்களிடையே தங் கள் தாய்மொழியில் பேசிய தலைவர்கள் இப்போது ஆங்கிலம்தான் நிர்வாக மொழி என்கின்றனர். ஆங்கி லம் மக்களுக்குப் புரியாத ஒரு மொழியாக இருக்கிறது.

அரசாங்கம் ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டுமென்று கூறுபவர்கள், முன்னேறிவிட்ட சாதிகளைச் சார்ந்தவர்களே. ஆங்கிலம் தெரியாதவர் கள், கல்வி கற்க வசதியில்லாத பின் தங்கிவிட்ட சாதிகளைச் சார்ந்தவர்களே. அவர்கள் ஆங்கிலம் கற் பதற்காக உபகாரச் சம்பளம் என்னும், 'லஞ்சம்' வழங் கப் படுகின்றது. ஆங்கிலம் கற்றவர்களின் நிரந்தர அடிமைகளாக வாழ வேண்டும் என்பதுதான் இந்த ஏற்பாட்டின் நோக்கம். பின் தங்கிவிட்ட சாதியினர் கல்வி கற்பதற்கு ஊக்கமளிக்கப் படுகின்றனர். அவர் களும் சுகஜீவிகளான முன்னேறிவிட்ட சாதிகளோடு சேர்ந்துவிட வேண்டுமாம். இது, அபாயகரமான போக்காகும்

[6–5–55-ல் கர்நூலில் பத்திரிகை நிருபர்களிடம் நிகழ்த்திய உரை.]

திரு. வி. க.

ஒருவன் தனக்குரிய நாட்டுக் கல்வியால் அறிவு பெற்று, நிலைத்த நெஞ்சம் பெற்ற பின்னர், அறிவு விளக்கத்துக்கு உலகிலுள்ள மொழிகளை யெல்லாம்—கல்வித் துறைகளை யெல்லாம் பயிலலாம்.

தாயைக் கொன்று பிற மாதரைப் போற்றுதல் கூடாது.

நம் நாட்டார் நமது நாட்டுக் கலைகளைக் கொலை புரிந்து பிற நாட்டுக் கலைகளை வளர்ப்பதில் உலகை வென்றவர்களல்லரோ? இதுபோழ்து நமது நாட்டில் கல்வியாளர் என்று மதிக்கப்படுவோர் பெரிதும் ஆங்கிலம் பயின்றவரேயாவர். அவர் உடல் பாரதநாட்டின தாயினும், அவர் மனம் இங்கிலாந்துக்குச் சுவீகாரம் போயிருக்கிறது. இம் மாறுபட்ட வாழ்க்கையுடைய அண்ணல்களை இந்தியர் என்று அழைப்பதா, இங்கிலீஷ்காரர் என்று அழைப்பதா? என்னும் ஐயம் நிகழ்கின்றது. இந்நாட்டு மக்கள் நாட்டைக் கொலை செய்வது போல் வேறெந்த நாட்டினர் தம் நாட்டைக் கொலை செய்கிறார்? கொடுமை! கொடுமை!!

நாட்டு மொழியில் பற்றில்லாத ஒருவன் நாட்டினிடத்து எவ்வாறு பற்றுடையவனாவான்?

ஆங்கிலம் பயின்ற தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் தமிழ்த் தாயை மாசு படர்ந்த துச்சிலிருத்தி, அவளுக்கு உணவும் உடையும் அளியாது அவளை வருத்தி, அயல் மாதை நடுவீட்டில் அமர்த்தி, அம் மாதுக்கு நல்லுணவும் உடையுந் தந்து, மலர்சூட்டி அவளை வழிபடுதல் எவரும் அறிந்ததொன்று. இது நம் மக்களின் அறிவைப் புலப்படுத்துகிறதா? அறியாமையைப் புலப்படுத்துகிறதா? தமிழ் மக்களே! ஒருங்கள்! தமிழின் தொன்மை என்ன! தமிழ் பாக்களின் வனப்பென்ன? மயிர் சிலிர்க்கின்றது. மிகத் தொன்மை வாய்ந்த ஒரு பெருந் தனிமொழியன்றோ நந்தமிழ்?

தமிழனாகப் பிறந்து தமிழ்ச் சுவையுணர்ந்த ஒருவன் வீடுபேற்றையுங் காதலியான். அவனுக்கு வீடுபேறு தமிழ் மொழி இன்பமேயாகும். அவன் மீண்டும் தமிழ் நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவை மாந்தி இன்புறவே விரும்புவன்.

['மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலிலிருந்து.]

கேசவ சந்திர சென்

[இவர், ராஜா ராம்மோகன் ராய் துவக்கிய பிரம்மஞான சங்கத்தின் தலைவராக இருந்தவர். சிறந்த கல்விமான்.]

இந்தியாவின் புராதன அமைப்புக்களை நாம் (ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயின்றவர்கள்) அழித்து விட்டோம். ஆனால், இந்த அழிவினின்று நாம் ஒரு புதிய வாழ்வு கோரும் விஷயத்தில் வெற்றி பெற்றோமில்லை.

ஆங்கிலம் படிக்காத நம் நாட்டு மக்களே, ஆங்கிலம் படித்தவர்களிடத்திலுள்ள குறைகளை எடுத்துக் காட்ட திறமை பெற்றிருக்கின்றனர். நம்முடைய உயர் படிப்பை ஆங்கிலம் படிக்காத மக்கள் வியந்து போற்றுகின்றனர். ஆனால், கல்லூரிகளில் பயின்று வெளிவரும் இளைஞர்கள், முந்திய தலைமுறையினரைப் போல் (ஆங்கிலக் கல்வி பெறுதவர் போல்) யோக்கியதையுடையவர்களாகவோ, ஒழுக்கமுடையவர்களாகவோ இல்லையென்று பொது மக்கள் கூறுகின்றனர்.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

[தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தின் வாயிலாகவே கல்வி பயின்றவர்களைப்பற்றி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தெரிவித்த கருத்துபற்றி மகாகவி பாரதியார் தமது 'இந்தியா' பத்திரிகையில் எழுதிய விமர்சனம்.]

பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர்கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அன்னிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகித் தமிழ்மொழியே இறந்து போய்விட வேண்டுமென்றும் கூறுவதை நாம் கண்டித்துப் பேசியிருக்கிறோம். இவர்கள் கிடக்க, மற்றப்படி பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும் பொழுது நமக்கு வருத்தமுண்டாகிறது.

இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹா வித்வான் ஸ்வாமிநாதய்யர் சொல்லிய வார்த்தையொன்று நம் நெஞ்சை விட்டு ஒருபோதும் அகலமாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'மீட்டிங்' நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமிநாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார் :—

"ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ்விஷயத்தில் ஒருவிதமான அபிப்பிராயமும் என்னால் கொடுக்க முடியாது. என்ற போதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்வித அருமையான விஷயங்கள் கிடையாவென்று சொல்லும்பொழுது உடன் எனக்கு வருத்தமுண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனை முறையோ சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களிலே நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்துத் தமிழ் நூல்களிற் பயிற்சி யில்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்பிராயம் கொடுப்பதுதான் வெறுக்கத் தக்கதாக இருக்கின்றது" என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவந்தானே? ஆனையையே பார்த்திராத குருடனா அதன் நிறம் முதலியவற்றைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கொடுக்க வேண்டும்?

மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார்

[இவர், உலகப் புகழ்பெற்ற பேரறிஞராவார். ஆங்கிலத்தில் எல்லையற்ற புலமை பெற்றிருந்தார். நாவன்மை காரணமாக, "வெள்ளி நாக்கு சாஸ்திரி'' என்று புகழப் பெற்றவர். ஆங்கிலத்தின் வாயிலாகவே கல்வி கற்றதால், தம் தாய் மொழியான தமிழில் ஞானம் பெறுதவராஞர். அதன் தவறை பிற்காலத்தில் உணர்ந்தார்.]

''என்னை மிகச் சோம்பேறி யென்று சொல்ல மாட்டார்கள். ஆயினும், உண்மை எனக்குத் தெரியுமே! எவ்வளவோ காலத்தை வீண் போக்கி யிருக்கிறேன். சீட்டாட்டத்திலும் வீண் வம்பு பேசுவதிலும் வெகு காலம் போயிற்று. இதைத் தமிழ்ப் படிப்பிலும் ஸமஸ்கிருதப் படிப்பிலும் போக்கியிருந்தால் எவ்வளவோ மேன்மை! தமிழைத் தாய்மொழியாய்ப் படைத்து, அதிலுள்ள அழகிய நூல்களைப் படியாததும், அதில் நேர்த்தியாய்ப் பேசவும் வரையவும் கற்காததும் பெருத்த குற்றமும் வெட்கமுமாகும்.

['கலைமகள்' வெளியீடாக வந்துள்ள 'மீண்டும் வாழ்ந்தால்... ?' என்னும் நூலில் 22-வது பக்கத்தில் உள்ளது.]

அரசியல் தலைவர்கள்

காந்தியடிகள்

(அந்நிய மொழி வாயிலாகக் கல்வி கற்பதால் ஏற்படும் தீமைகள் பல. நம் பிள்ளைகளின் மூளை சோர்வுறுகின்றது. அவர்கள் நரம்புகளின்மீது அளவுக்கு மீறிய பாரம் சுமத்தப்படுகின்றது. அவர்கள் மனப்பாடம் செய்யும் கிளிப்பிள்ளைகள் ஆகிவிடுகிறார்கள். சொந்தமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் சக்தியற்றுப்போய் விடுகிறார்கள்.

அந்நிய நாட்டு மொழி மூலம் கல்வி கற்பதால் நம் பிள்ளைகள் தங்கள் சொந்த நாட்டிலேயே அந்நியர் போல் ஆகிவிடுகின்றனர். அந்நியமொழி பயிற்சி மொழியாக இருப்பது நம் மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.)

(எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமென்றால், நான் இன்றே நம் சிறுவர்கள் அன்னிய மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்தி விடுவேன். எல்லா ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் உடனே தாய்மொழியின் மூலம் கற்பிக்கும் படியாகக் கட்டளையிடுவேன். இம்மாற்றத்தை எதிர்ப்பவர்களை வேலையிலிருந்து விலக்கி விடுவேன்.

பாடப் புத்தகங்கள் தயாராகும்வரை நான் காத்திருக்கமாட்டேன். பயிற்சிமொழி மாறியபின் அவை தாமாகவே வந்துவிடும். அந்நிய மொழி மூலம் கல்வி கற்பிக்கும் இக்கேட்டுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும்.

என்ன ஆயினும் சரி, உடனடியாகப் பயிற்சி மொழி மாற்றப்படல் வேண்டும்.)

மாநில நீதி மன்றங்களிலெல்லாம் அந்தந்த மாநில மொழியே வழங்கப்படல் வேண்டும். அதனால் நம் மாநில மொழிகளில் மதிப்பும், முக்கியத்துவமும் அதிக மாகும்.

மாநிலச் சட்டசபைகளின் நடவடிக்கைகள் மாநில மொழிகளிலேயே நடைபெற வேண்டும்.

படிப்படியாக மாற்றுமல், உடனடியாகப் பயிற்சி மொழியை மாற்றிவிட்டோம் என்றால், மிகக் குறுகிய காலத்தில் நமக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் வந்துவிடும். ஆசிரியர்களும் வந்து சேர்வார்கள். நினைத்தால், ஓராண்டுக் காலத்திற்குள் நாம் இதைச் சாதித்து விடலாம்.

இம்முயற்சி வெற்றிபெற உடனடியாக மாநில அரசாங்க அலுவலகங்களிலும் நீதிமன்றங்களிலும் தாய்மொழியைக் கொண்டுவர வேண்டும் என்பதில் ஐயமில்லை.

[கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷின் வித்யாலயத்தார் தொகுத்து வெளியிட்டுள்ள 'கல்வி' என்னும் நூலிலிருந்து.]

இனிமேல் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிகட்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவசியமான அன்னிய மொழிகளைத் தெரிந்த தேச பக்தர்களும் ராஜ தந்திரிகளும் அவர்களுக்கு யோசனை கூறுவார்கள்.

—அரிஜன், 22—6—47.

மக்கள் புரிந்து கொள்கின்ற ஒரு மொழியில் அறிவு போதிக்கப்படுவதும், கிரகிக்கப்படுவதும் நிகழா விட்டால், ஒரு நாட்டின் இளைஞர்கள் மக்களுடன் நெருங்கிய, உயிர்த் தத்துவம் கொண்ட தொடர்பு கொள்ள முடியாது என்ற செய்திக்கு நிரூபணமே வேண்டியதில்லை. அன்னிய ஆட்சியினால் விளையும் தீமைகள் பல. ஆனால், இந்நாட்டின் இளைஞர்களின் மீது கண்மூடித்தனமாக அன்னிய மொழியொன்றைத் திணிப்பதை வரலாறு மிகப் பெரிய தீமையாகக் கருதி

கணக்கிடும். அது நம் நாட்டின் ஜீவநாடியை ஒடுக்கி விட்டது. நமது மாணவர்களின் வாழ்க்கையைக் குடித்துக் குறுக்கிவிட்டது. அவர்களை மக்களிடமிருந்து பிரித்துப் பேதப்படுத்தி விட்டது. கல்வியைக் கைக்கெட்டாக் கனியாக்கி விட்டது. இந்தக் கொள்கை நீடிக்குமானால் அது நம் நாட்டின் ஆன்மாவைச் சூறையாடுவதற்கொப்பாகும். ஆகையால் எவ்வளவு விரைவில் கற்ற இந்தியர்கள் அன்னிய மொழியின் போதையிலிருந்து விடுபடுகிறார்களோ அவ்வளவுக்கு அவர்களுக்கும் மக்களுக்கும் நல்லது.

ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்வதற்கு அதிக மதிப்பைக் கொடுக்கும் மூடநம்பிக்கையிலிருந்து நாம் விடுதலை பெற்று சமுதாயத்தையும் அதிலிருந்து விடுவிப்போமாயின், அதுவே சமூகத்திற்கு நாம் செய்யக் கூடிய சிறந்த சேவையாகும்.

நமது பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே போதனமொழியாக இருந்து வருகின்றது. அதுவே, நாட்டின் பொதுமொழியாகவும் ஆகிக் கொண்டு வருகின்றது. நமது சிறந்த கருத்துக்களையெல்லாம் அம்மொழியின் மூலமே வெளியிட்டு வருகிறோம்.

பாமர மக்களிடமிருந்து நாம் பெற்றிருக்கும் புதிய கருத்துக்களின் பலனை பாமரமக்கள் அடைய முடியாதபடியும் போயிற்று. பழகிப்போய் விட்ட காரணத்தால் நாம் இதனை உணரமுடியாமல் இருந்து வருகிறோம்.

உண்மைகளைக் கிரகித்துக் கொள்வதற்குப் பதிலாக, விசித்திரமான சொற்களையும் அவற்றின் உச்சரிப்புகளையும் மனப்பாடம் செய்வதிலேயே நம் காலத்தைக் கழித்து வந்திருக்கிறோம். நமது பெற்றோர்களிடமிருந்து பெற்ற பயிற்சியாகிய அடிப்படையின் மீது வளர்த்துக் கொண்டு போவதற்குப் பதிலாக அதை அநேகமாக நாம் மறந்தே போய் விட்டோம். இது போன்ற அநீதி சரித்திரத்தில் வேறு எதுவுமே இல்லை. இது தேசத்தையும் பொறுத்த துக்ககரமான விஷயமாகும். நாம் நமது சொந்த மொழிக்குத் திரும்ப வேண்டும்.

(நம் தாய்மொழிகளிலேயே நம்முடைய பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் கல்வி யளிக்கும் நிலை வரையில் நாம் ஓய்ந்திருக்கக் கூடாது.

—காந்தி நூல்கள் 7 : பக் 910.)

ராஜாஜி

போதனு மொழியைப் பொறுத்தவரையில். சர்வ கலாசாலைப் படிப்பும் உள்பட, ஆரம்பப்பள்ளி, உயர்தரப்பள்ளி ஆகிய எல்லாக் கல்விக் கட்டங்களிலும் தாய்மொழியிலேயே விளக்கவும், போதிக்கவும் வேண்டுமென்பது வெகுகாலமாகவே எனது திடமான கருத்தாயிருந்து வந்துள்ளது; இன்னமும் இதுவே என் அபிப்பிராயம்.

(எல்லாப் பாடங்களிலும் ஆங்கிலத்தையே போதனு மொழியாக்கும் பட்சத்தில், அந்த மொழியில் அறிவைப் பெருக்குவதே ஏறக்குறைய பிரதான நோக்கமாகி விடும்; அப்போது, விஞ்ஞானம் அல்லது இதர பாடங்களின் போதனைத்தரம் குன்றிவிடும். ஆங்கிலத்தின் மூலம் விஞ்ஞானத்தைக் கற்பதற்கு மாருக, விஞ்ஞானத்தின் மூலம் ஆங்கிலத்தைக் கற்க நாம் முற்பட்டு விடவும் கூடும்.

தகுந்த அளவு ஆங்கில ஞானத்தை நிலைநிறுத்தும் பொருட்டு விஞ்ஞானத்தையும் இதர பாடங்களையும் தாய்மொழியில் போதிப்பதன் மூலம் கிட்டக்கூடிய சுளுவையும் தெளிவையும் நாம் தியாகம் செய்யத் தேவையில்லை.

சிரமம் மிகுந்த அந்நிய மொழியொன்றின் வாயிலாகவே தங்கள் ஞானம் முழுவதையும் மாணவர்கள் பெறவேண்டிய அவசியமில்லை.

['நமது ஜனநாயகம்' என்னும் நூலிலுள்ளது.])

ஆங்கில மொழி அழகானதாக இருக்கலாம். ஆனல், நமது சிந்தனையில் அழுத்தமாக உட்கார்ந்து

கொண்டு அது தாராளமாக வளரமுடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

தாய் மொழியைப் போதனு மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது என் விருப்பமாகும். எல்லா சர்வகலா சாலைகளும் இந்த விதியைப் பின் பற்றி நடக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

ஆங்கிலத்துக்குரிய முக்கியத்துவத்தைத் தாராள மாகக் கொடுப்பதை வேண்டாமென்று நான் சொல்ல வில்லை. ஆனுல், தயவு செய்து அதனை எல்லாவற்றுக் கும் போதனு மொழியாகச் செய்து விடாதீர்கள்.

['ராஜாஜி பேசுகிருர்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

டாக்டர் ஆர். கே. சண்முகம்

முதலில் அறிவு மூலம் தேசீய மனப்பான்மை ஏற் பட்டது. பின்னுல் உணர்ச்சியின் மூலம் தேசீய மனப் பான்மை தீவிரமாய்த் தோன்றி வளர்கிறது. அதுவே சீக்கிரம் நம் நாடு சுதந்திரமடைந்ததற்குக் காரண மாகும். தாய்மொழி மூலம் விஷயங்களை எடுத்துச் சொல்லுவதுதான் உணர்ச்சிக்குக் காரணம்.

ஒரு கவிதையை தாய்மொழி மூலம் படிப்பது தான் அதன் சுவையை நன்கு அனுபவிக்க வழியாகும்.

தமிழ் மொழியின் நிலைமை எப்படி இருக்கிற தென்று கேளுங்கள். வயிற்றுப் பிழைப்புக்கு, அதா வது உத்தியோகம் பார்க்க வேண்டுமானுல், இங்கிலீஷ் படிக்க வேண்டும். கலியாணம் முதலியவைகள் செய்வ தானுல் சமஸ்கிருதத்தில் செய்யவேண்டும். தேசாபி மானி என்று பெயரெடுக்க வேண்டுமானுல், ஹிந்தி படிக்க வேண்டும். சங்கீதம் பாட தெலுங்கு படிக்க வேண்டும். சாதாரணமாகப் பேசும் போது...மணிப்பிர வாளமாகப் பேசவேண்டும். இப்படியிருந்தால் தமி ழுக்கு நாம் கொடுத்திருக்கும் ஸ்தானம் என்ன?

நம்முடைய தாய் மொழியில் சாதாரணமாகப் பேசும் சக்தியைக்கூட இழந்து விட்டோமல்லவா? நாம் பேசும் போது நூற்றுக்கு அறுபது வார்த்தைக்கு மேல் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறோமே. அதுவும் எவ்வளவு ஆபாசமாக உபயோகிக்கிறோம். எளிதான தமிழ் வார்த்தைகளைக் கூட ஆங்கிலப்படுத்தி விடுகிறோம். 'நாளைய தினம் சந்திக்கலாம்' என்பதற்கு 'நாளைய தினம் மீட்பண்ணலாம்' என்றல்லவா சொல்லுகிறோம்? இந்த வழக்கம் இப்படியே போய்க் கொண்டிருந்தால் தமிழ் மொழிக்குப் பதிலாக ஒரு மணிப்பிரவாள நடையல்லவா தமிழ் நாட்டில் ஏற்பட்டு விடும்? இதை மாற்ற நாம் முயற்சிக்க வேண்டாமா?

முப்பது வருஷ காலத்தில் சுதந்திர உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது ஆங்கிலப் பிரசாரத்தினுலல்ல. தமிழ் மக்களுக்கு அவ்வேட்கையை உண்டாக்கியது சுப்பிரமணிய பாரதி, ராமலிங்கம் பாட்டுக்களே.

இங்ஙனம் பெற்ற சுதந்திரத்தை மொழியின்மூலமாகத்தான் காப்பாற்ற முடியும்.

வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தாய் மொழிக்கு இடமில்லை யென்றுல், சுதந்திரத்தால் பயனில்லை.

தமிழை—தாய் மொழியை ஒவ்வொருவரும் உணர்ச்சியோடு வளர்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் அதை உபயோகிக்க வேண்டும்.

அரசாங்கம் தமிழில் நடக்க வேண்டும்; சட்டசபையில் நாம் தமிழில் பேசவேண்டும்; பொருளாதாரத்தை தமிழில் ஆராய வேண்டும். விஞ்ஞானத்தைத் தமிழில் கற்க வேண்டும்.

இது இளங்கோவனும், கம்பனும் பிறந்த நாடு; ஷேக்ஸ்பியரும் மில்டனும் பிறந்த நாடல்ல.

[டாக்டர் ஆர். கே. சண்முகம் 'மணிவிழா மலரி'ல் ''சண்முகனுர் பொருளுரைகள்'' என்னும் பகுதியிலிருந்து திரட்டியது.]

திரு. சி. சுப்பிரமணியம்

"உலகம் சுற்றினேன்" என்ற தலைப்பில் தமிழக முன்னாள் கல்வி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் 'ஆனந்த விகட'னில் எழுதிய தொடர் கட்டுரையில் 26—5—63 இதழின் கட்டுரையில் ஒரு பகுதி வருமாறு :

"உலகிலுள்ள விஞ்ஞான மேதைகளில் பலர் இன்று ஜப்பானிய மக்களிடையே உள்ளனர். அமெரிக்காவிலும்கூட பல ஜப்பானிய விஞ்ஞான மேதைகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சமீப காலத்தில் சில ஜப்பானிய விஞ்ஞானிகள் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் எந்த மொழியில் கல்வி பயின்று இந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ள நான் ஆவல் கொண்டது இயற்கையே !

ஜப்பானில் ஜப்பானிய மொழிதான் போதனு மொழி !

ஜப்பான் மொழி மிகவும் சிக்கலானது. பல ஆயிரக்கணக்கான எழுத்துக்களைக் கொண்டது. சீன மொழியைப் போல், ஜப்பான் மொழியும் சித்திர வடிவு கொண்டது. இருப்பினும், இந்தத் தாய்மொழியின் மூலமாகவே, ஆரம்பப் பள்ளியிலிருந்து ஆராய்ச்சிப் படிப்பு வரை பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளை, மொழி அளவில்தான் கற்கிறார்கள்.

ஜப்பானில் ஒரு சிலருக்குத்தான் சரளமாக ஆங்கிலத்தில் பேசவரும். இதன் காரணமாக, விஞ்ஞான அறிவு வளர்ச்சியோ, தொழில்நுட்பத் திறமை வளர்ச்சியோ குறைந்து விடவில்லை. அதற்குப் பதிலாக, இத்துறைகளில் உலக மக்களுடன் போட்டி போடக் கூடிய நிலைமை ஜப்பானுக்கு அமைந்துள்ளது. அதன் முக்கிய காரணம், கல்வி வாய்ப்பு எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதுதான்.

நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் இந்த வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்றால், அந்நிய மொழியின் மூல

மாக அதை ஏற்படுத்த முடியாது என்பது எல்லோராலும் அனுபவத்தில் கண்ட உண்மை. அந்நிய மொழியில் பயில்வதில் ஒரு சிலருக்குத்தான் திறமை உண்டு. அந்நிய மொழியில்தான் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்று சொல்லும்போது, அந்த வாய்ப்பு விசேஷத் திறமை கொண்டவர்களுக்கே கிடைக்கிறது. மற்றவர்கள் பின்னணியில் தங்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

ஜப்பான் நமக்கு இடித்துக் காட்டும் மற்றொரு படிப்பினை இது.

திரு. அஜாய் கோஷ்

[இவர், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர். சிறந்த அறிவாளி.]

ஒரு மொழி வளர்ச்சிபெற வேண்டுமானால், அந்த மொழியை மற்ற பாடங்களுடன் சேர்த்துப் படித்தால் மட்டும் போதாது. எல்லாப் பாடங்களும் அந்த மொழியிலேயே கற்பிக்கப்படுவது அத்தியாவசியம். இந்தியாவின் சரித்திர கர்த்தர்கள், தத்துவ ஞானிகள், பொருளாதார நிபுணர்கள், விஞ்ஞானிகள், நீதிநூல் வல்லுநர்கள் அனைவரும் ஆங்கிலத்தின் வழியாகப் படித்து அதன் வழியாகவே மாணவர்களுக்குப் புத்தகங்கள் எழுதவேண்டி யிருந்தது. ஆகவே, இந்திய ஆசிரியர்களால் இந்த விஷயங்கள் குறித்து எழுதப்பட்ட புத்தகங்களும் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டியதாயிற்று. விஞ்ஞானத் துறைகள் மட்டுமன்றி, கலைத்துறைகளாகிய சரித்திரம், தத்துவஞானம், சட்ட நுணுக்கம், அரசியல், பொருளாதாரம், இலக்கிய விமர்சனம் முதலியவற்றிலும் கூட இன்று இந்திய மொழிகளில் புத்தகங்களே இல்லைஎன்று கூறலாம். எந்த ஒரு துறையிலும் இந்தியன் ஒருவன் ஆங்கிலத்தின் துணையின்றி படித்துக் கொள்ள முடியாது.

ஆகவே, ஆங்கில மொழியின் ஆதிக்கம் நம்முடைய கலாசார வளர்ச்சியை அரித்துத் தின்றுவிட்டது என்று கூறலாம். நமது அறிவியல் வளர்ச்சியை அது தடுத்து நிறுத்திவிட்டது. ஆங்கிலம் அறிந்த மேல்நாட்டு இந்தியர்களை அறியாத பாமர மக்களிடமிருந்து இது பிரித்து விட்டது.

மத்தியிலும் மாகாணங்களிலும் ஆட்சி மொழி ஆங்கிலமாக இருந்தபடியால், மக்களில் பெரும் பகுதியினர் சட்டமியற்றுதல் நிர்வாகம் முதலிய துறைகளை அணுகவே முடியவில்லை.

தேசிய ஒற்றுமைப் பிணைப்பை விரைவாக வளர்ப்பதற்கும் ஜனநாயக இயக்கங்கள் வளர்வதற்கும் இது தடையாக இருந்தது. இன்றைக்கும் அகில இந்திய அமைப்புகள் பலவற்றிலும்—தொழிலாளி, விவசாயிகள் ஸ்தாபனங்கள் உள்பட—ஆங்கிலமே கையாளப்பட்டு வர வேண்டியிருக்கிறது. இந்த ஸ்தாபனங்களில்—அகில இந்திய ரீதியில் நடைபெறும் கூட்டங்களில்—நன்ருகக் கல்வி கற்றவர்கள் மத்தியதர வர்க்கத்தை அல்லது உயர்மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குகொள்ள முடிகிறது. பல ஸ்தாபனங்களில் அகில இந்திய காரியக் கமிட்டிகளில் அவர்களே உண்மையான அங்கத்தினராகப் பணியாற்ற முடிகிறது. ஏனெனில், ஆங்கிலம் அறியாதவர்கள் சாதாரணப் பிரதிநிதிகள் என்ற முறையில் கூட அகில இந்திய மாநாடுகளில் பங்குகொள்வதற்குக் கஷ்டப்படுகிருர்கள். பொதுமக்கள் தொடர்பு கொண்ட இயக்கங்களில் சொற்ப அனுபவம் உள்ளவர்களும் இதனுல் உண்டாகும் தொல்லைகளை அறிவார்கள்.

ஸ்ரீமந் நாராயண் அகர்வால்

இந்தத் துரதிர்ஷ்ட நாட்டில், தங்கள் குழந்தைகள் ஆங்கில மொழி மூலமே கல்வி கற்க வேண்டும் என்று விரும்பும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த 20 ஆம் நூற்ருண்டிலும் எண்ணற்றோர் இருக்கின்ருர்கள். இதை எண்ணிச் சிரிப்பதா, அழுவதா?

ஆங்கில மொழிப் பயிற்சியை இந்நாட்டில் கட்டாயப் பாடமாக்க முடியாது. அது மட்டுமன்று; கட்டாயப் பாடமாக்கவும் கூடாது. தற்கால ஆங்கில மொழியில் சாதாரண அறிவுதான் நமக்குத் தேவை. எழுதவும் பேசவும் தெரியவேண்டும்; இலக்கணம், மொழி மரபு, உச்சரிப்பு ஆகிய விதிகள் நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும். அவ்வளவு போதும்.

[ஸ்ரீமந் நாராயண் அகர்வால் எழுதி வெளியிட்டுள்ள 'தாய்மொழி மூலம் கல்வி' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயர்

மாணவர்களுக்கு அவர்களுடைய தாய் மொழியில் கல்வி போதித்தால்தான் நல்ல பலன் கிட்டுகின்றது. இதர பாடங்களைப் பிரதேச மொழியில் போதித்தால் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் தனிக் கவனம் செலுத்துவது சாத்தியம். இதன் மூலம் ஞானம் அபிவிருத்தி யடைகிறது. எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் போதிப்பது என்பது தற்போதைய வழக்கமாக இருக்கிறது. ஆங்கிலப் பாடம் போதிப்பவர்தான் அதில் நிபுணத்துவம் பெற்று இருப்பார். மற்றப் பாடங்களைப் போதிப்பவர்கள் அம்மொழியில் தீவிரமான பாண்டித்தியம் இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆகவே, மாணவர்களுக்கும் ஐந்து அல்லது ஆறு விதமான வகை ஆங்கிலத்தில் பாடபோதனை நடக்கிறது. இதனுல் எது இங்கிலீஷ் என்றே தெரியாமல் திகைக்க வேண்டியிருக்கிறது.

பிரதேச மொழியில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது வகுப்பின் சூழ்நிலையே மாறுதல் அடைகிறது. பாடங்கள் எல்லாம் சுவையாக அமைகின்றன. வேலையையும் துரிதமாகச் செய்ய முடியும். பிரதேச மொழியைக் கொண்டு போதிப்பதால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் புத்தி பூர்வமாக ஏற்படக்கூடிய பளு குறைந்து விடுகின்றது.

['சத்தியமூர்த்தி பேசுகிருர்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

டாக்டர் லோகியா எம். பி.

இந்தி பேசாத பகுதிகளில் உள்ள ஆங்கிலம் தெரிந்த சிலர் மக்களிடையே தங்களுக்குள்ள செல்வாக்கு தொடர்ந்து இருந்துவர வேண்டும் என்பதற்காக இந்தி ஏகாதிபத்தியம் என்ற பீதியைக் கிளப்பி விட்டிருக்கின்றனர். அவர்கள் இந்தி வளர்ச்சியை எதிர்ப்பவர்கள் அல்லர். மாநில மொழிகள் வளர்ந்து ஆங்கிலத்திற்குப் பதிலாக அம்மொழிகள் பயன்படுத்தப்பட்டால் தாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும் என எண்ணி 'இந்தி ஏகாதிபத்தியம்' என்ற பீதியைக் கிளப்பி விட்டிருக்கின்றனர்.

[12—8—62ல் அலகாபாத்தில் நடைபெற்ற ஆங்கில ஒழிப்பு மாநாட்டில் பேசியது.]

ஜவகர்லால் நேரு

ஆங்கில மொழி இந்தியாவில் பொதுமொழியாக ஆகக் கூடுமென்று சிலர் எண்ணுகிறார்கள். கைவிரலில் எண்ணக்கூடிய சிறு கூட்டத்தார் அதைக் கற்றுக் கொள்ளலாம். அது பொதுமொழியாக ஆகக் கூடும் என்ற கற்பனையே விநோதமானதாகும். பாமர மக்களின் கல்வியையும் கலைப் பெருக்கையும் அடிப்படையாகக் கொண்ட பிரச்னைக்கும் ஆங்கில மொழிக்கும் தொடர்பே கிடையாது. இன்றைக்கிருக்கிறதுபோல ஆங்கில மொழி உலகத் தொடர்புக்கு அதிகமாக உபயோகப்பட்டு வரலாம். விஞ்ஞானம், வாணிபம், முதலிய துறைகளில் உபயோகமாக இருக்கலாம். உலக நிகழ்ச்சிகளோடும், உலகக் கருத்துக்களோடும் தொடர்பு வைத்துக் கொள்ளும் பொருட்டு நம்மில் சிலர் அந்நிய மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆங்கில மொழியைத் தவிர பிரெஞ்சு, ருஷ்யன், ஸ்பானிஷ், இத்தாலியன் மொழிகளைக் கற்றுக் கொடுக்கவும் நமது பல்கலைக்கழகங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது என் ஆசையாகும்.

இப்போது நாம் செய்துவருவது போலக் கூடுதலான நேரத்தைச் செலவிட்டு ஆங்கில மொழியின் சிறப்புகளைத் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. ஒரு சிலர் அவ்வாறு செய்வதால் கெடுதலில்லை. ஆனால், நம்மில் பெரும்பான்மையோர் ஆங்கிலம் பயில்வதையே லட்சியமாகக் கொண்டு உழைப்பது தேவையில்லாத ஒரு சுமையைத் தூக்குவது போலாகும். வேறு துறைகளில் அவர்கள் முற்போக்கு அடைவது தடைபட்டுப் போகும்.

உலகத்தைப் பற்றிச் சரியான பார்வை நமக்கிருக்க வேண்டுமானால், நாம் ஆங்கிலக் கண்ணாடிகளை மட்டும் வைத்துக் கொண்டு பார்க்கக்கூடாது. ஏற்கெனவே, அன்னிய மொழிகளிலே ஆங்கில மொழி ஒன்றை மட்டுமே கற்றுக் கொண்டு பிரிட்டிஷாரின் கருத்துக்களையே நாம் ஏற்றுக்கொண்டதால், நாம் நம்முடைய மனப்பான்மையில் ஒரு பக்கமாகச் சரிந்து கொண்டே போய்விட்டோம். இதனை நம்முடைய தேசியவாதிகளில் தீவிரவாதிகள்கூட உணருவதில்லை.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் இலக்கணத்தோடு கூடிய ஆங்கிலத்தைக் கட்டிக்கொண்டு அழுவதைக் காட்டிலும் விரிவான அளவில் "எளிய ஆங்கிலம்" கற்றுக் கொடுப்பது விரும்பத்தக்கதாகும். இலக்கணத்தோடு கூடிய ஆங்கிலத்தை நிபுணர்களுக்கும்—குறிப்பாக, சில மாணவர்களுக்கும் விட்டுவிடலாம்.

['சுய சரிதை'யில்.]

இன்றைய நாளிலும் கூட ஆங்கிலந் தெரிந்தவர்கள் தங்களை ஒரு மேலான இனத்தவர்களாகக் கருதிப் பெருமை யடித்துக் கொள்கிறார்கள். ஆங்கிலம் தெரியாதவர்கள் தங்களைவிட மட்டமானவர்கள் என்பது இவர்களது எண்ணம். ஆங்கிலம் தெரிந்தவர்களிடத்தில் இந்தத் தலைக்கனம் இருக்கிறது.

எனக்கும் ஒரு காலத்தில் இந்த வீண் தற்பெருமை இருந்தது. 19-வது நூற்றாண்டில் தலைதூக்கிய ஒரு புதிய மரபினரில் நான் ஒருவன் என்ற எண்ணம் இருந்தது.

ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கக் கூடாது என்பதற்கான காரணத்தை இப்பொழுது நான் உங்களுக்கு விளக்கிக்கூற விரும்புகிறேன். குறுகிய தேசிய வெறிபிடித்து ஆங்கிலம் நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கக் கூடாதென்று நான் சொல்லவில்லை.

ஆங்கில மொழியானது, அம்மொழி தெரிந்தவர்களுக்கும் அம்மொழி தெரியாத நாட்டிலுள்ள இதர கோடிக்கணக்கான மக்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளியை உண்டுபண்ணி விட்டது. ஆங்கிலம் இருக்கும்வரை மக்களுக்கிடையே இந்த இடைவெளி இருந்து கொண்டுதான் இருக்கும். இதனுற்றுன், ஆங்கிலம் நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கக்கூடாதென்று நான் கூறுகின்றேன். இது எவ்வாறு குறுகிய தேசிய வெறியாகும்?

விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு பெறுவதைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் நாம் மொழித் துறையில் எடுக்கக் கூடாது. எனவே, அந்நிய மொழிகளின் கூட்டுறவு அவசியமாகிறது. அதே சமயத்தில், நாம் நமது சொந்த மொழியையே உபயோகிக்கிறோம்; ஓர் அந்நிய மொழியை நம்பிக் கொண்டு இருக்கவில்லை—என்ற உணர்ச்சி நம் மக்களுக்கு இருக்க வேண்டியது முக்கியம். மிகமிக முக்கியம்.

பிரதேச மொழிகள் வாயிலாகவே நாம் மக்களை அணுக முடியும். இதற்கு பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இறுதியில் பிரதேச மொழிகளிலேயே கல்வியைப் பரப்ப வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

> [ஆட்சிமொழி மசோதா மீது பாராளு மன்றத்தில் 1963 மே முதல் வாரத்தில்—பிரதமர் நேரு பேசுகையில் வெளியிட்ட கருத்து.]

இந்தியாவில் சாதி முறையை ஒழித்ததுபோல், 'ஆங்கிலம் படித்தவர்கள்' என்ற சாதி மனோபாவத்தையும் ஒழிக்கவேண்டும்.

இந்தியாவில் ஏராளமான சாதிகள் இருக்கின்றன. இங்கு எதுவும் தனி சாதியாக மாறிவிடுகிறது. ஆங்

கிலம் படிக்காதவர்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்று ஆங்கிலம் படித்தவர்கள் கருதுகின்றனர்.

ஆங்கிலத்தையோ அல்லது வேறு மொழியையோ கற்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். ஆனால், மொழிப் பிரச்னை அரசியலோடு கலந்துள்ளது.

இந்தியாவில் பல தலைமுறைகளில் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தி வருவது ஆங்கில எதிர்ப்பாளர்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளது. ஆங்கில அறிவு ஒழுங்கைக் குறிப்பதாக, ஆங்கிலம் படித்தவர்கள் மனத்தில் ஒரு எண்ணம் வளர்ந்துள்ளது. இந்த எண்ணம் மிகவும் முறையற்றதும் ஆட்சேபிக்கக் கூடியதுமாகும். நாம் ஆங்கிலத்தை விரும்புவது வேறு விஷயம். ஆனால், 'ஆங்கிலத்துக்கே மதிப்பு' என்ற மனோபாவத்தை நாம் ஆட்சேபிக்கிறோம். இந்தியாவின் மீது இங்கிலாந்தின் அரசியல் ஆதிக்கமும் இந்த மனோபாவமும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. இந்த மனோபாவத்தை விட்டு ஆங்கிலத்தையோ, வேறு மொழியையோ, அதனதன் வளத்தைக் கருதிக் கற்றால் எதிர்ப்புணர்ச்சி உண்டாகாது. தாய் மொழிக்குப் பதில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று கூறினால் ஆத்திரம் ஏற்படும். அதனால் ஆங்கிலம் தான் பாதிக்கப்படும்.

ஒரு சில ஆங்கிலம் கற்றவர்களுக்கும் கோடிக் கணக்கான மக்களுக்கும் இடையே மதில் சுவராக ஆங்கிலம் இருப்பதை நாம் விரும்பவில்லை. பிரதேச மொழிகளின் மூலமே உண்மையான முன்னேற்றம் காணமுடியும். இதற்குப் பிரதேச மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும். பிரதேச மொழியில் பாடங்களைக் கற்பிப்பதால் அம்மொழியிலேயே அறிவு வளர்ந்து குழந்தைகளுக்கு மிகுந்தபலன் ஏற்படுகிறது.

உயர்தரக் கல்விப் போதனைக்கு பிரதேச மொழிகளைப் பயன்படுத்த முடியும் என்பதிலே எனக்குச் சந்தேகம் கிடையாது. விஞ்ஞான, கலை நுட்பச்சொற்கள் விஷயத்தில் கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால்,

அனுபவத்தின் வாயிலாக இக்கஷ்டங்களை நாளடைவில் போக்கி விடலாம்.

[ஐதராபாத்திலுள்ள மத்திய ஆங்கிலப் பயிற்சிக்கழக ஆசிரியர்கள்—மாணவர்கள் அடங்கிய கூட்டத்தில், 22—7—63-ல் பிரதமர் நேரு 'மொழிச் சிக்கல்' பற்றி விரிவாகப் பேசியபோது கூறியது.]

திரு. கு. காமராசர்

[இவர் முதலமைச்சராக இருந்த போதுதான் திரு. சி. சுப்பிரமணியம் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கினர். அப்போது, தமிழ் பயிற்சிமொழித் திட்டத்தை ஆதரித்து காமராசர் தெரிவித்த கருத்துக்கள்.]

கல்லூரிகளில் போதன மொழியாக எந்த மொழி இருக்கவேண்டுமென்பது ஒரு பிரச்சினை. கல்வித் துறையில் ஒரு தடுமாற்றம். பல வழிகளில் தடுமாற்றம் ஏற்பட்டிருப்பதுபோல் கல்வித் துறையிலும் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனல், தடுமாற்றம் பற்றி பயப்படவேண்டிய அவசியமில்லை.

எப்போதுமே புதிய வழியிலே போவது மிகவும் சிரமமான காரியம். புதிய வழியிலே போகும்போது, பழைய வழியிலே பழக்கப்பட்டவர்கள் யாரும் புதிய வழிக்கு வரமாட்டார்கள். ஒருவேளை சாதாரண ஜனங்கள் வந்துவிடுவார்கள், புதிய வழிக்கு. ஆனல், படித்தவர்கள் வரவே மாட்டார்கள்; ஒரே பிடிவாதம் பண்ணுவார்கள்.

"பழக்கத்தைத் திடீரென்று மாற்றிக் கொள்வது படித்தவர்களுக்குச் சிரமம். சாதாரண ஜனங்களுக்கு இது நன்ருகப் புரியும். ஏனென்ருல், அவர்களுக்கு விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருப்பதனல், நல்லது எது, கெட்டது எது என்பதை உடனே தெரிந்து கொள்கிருர்கள். புதிய வழி நல்லது என்று தோன்றினல், அதில் போக அவர்களுக்குப் பயமே இல்லை. பழைய வழியையேபிடித்துக்

கொண்டு போகின்றவர்கள், படித்தவர்கள். புதிய வழிக்குப் போகவேண்டுமானால், நமக்கு ஏன் இந்தச் சிரமம் என்று படித்தவர்கள் நினைப்பது இயற்கை.

அந்நிய மொழியில் கல்வி பயில்வது சொந்த நாட்டு மக்களைச் சுரண்டுவதற்கே.

எனவே, நம் தாய்மொழியை கல்விப் பயிற்சி மொழியாக்கி அதன் மூலம் எல்லா விஷயங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நாம் நினைக்கும் போது படிக்காதவர்களுக்கும் படித்தவர்களுக்கும் முரண்பாடு ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும், தாய்மொழியிலேயே பாடங்களைக் கற்றுக் கொடுப்பது தான் இயற்கை.

மக்களுக்குப் புரியாத மொழியில் பேசினால் எது வேண்டுமானாலும் பேசிக்கொண்டே போகலாம். மக்களை ஏமாற்றுவதற்குப் புரியாத மொழியில் பேசவேண்டும் என்பது அர்த்தம். எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் பேசினால் ஏமாற்ற முடியாது. உடனே கண்டு பிடித்து விடுவார்கள்.

தாய் மொழியைக் கல்லூரிக் கல்விமொழி யாக்கும் கொள்கையை அரசாங்கத்தார் நடத்திப் பார்க்கத் தான் போகின்றார்கள். இல்லாவிட்டால் இவ்வளவு சிரமம் ஏன் படவேண்டும்? நல்ல கொள்கை என்பதை உணர்ந்ததனால்தான், இந்தக் கொள்கையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று, சிரமப்பட்டு புத்தகங்களை வெளியிடவும், அதற்கு என்று ஒரு குழுவினரை ஏற்படுத்திக் கொண்டு மேலும் மேலும் முயற்சி செய்துகொண்டு வருகிறோம். இதைக் கைவிட்டு விடுவோம் என்று கனக் காணவேண்டாம்.

["மக்களாட்சி"—என்னும் நூலிலிருந்து.]

திரு. சி. என். அண்ணாத்துரை

முன்பு கல்வி மந்திரியாக இருந்த சி. சுப்பிரமணியம், "தமிழ் பயிற்சி மொழியாக வர முடியும்" என்றார். "தமிழால் முடியும்!" என்னும் புத்தகத்தையும் எழுதினார். அவர் இருந்த இடத்தில் இருக்கும் திரு. பக்தவத்சலம், "தமிழால் முடியாது" என்ற புத்தகம் எழுதவில்லை. ஆனால், "தமிழால் முடியாது" என்று பேசி வருகிறார். நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், "தமிழால் முடியுமா ?" என்பதுதான். ஐந்து ஆண்டுக்குள் இந்த நிலை ஏற்படக் காரணமென்ன ?

இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளாவது தமிழிலேயே எல்லா அலுவல்களும் நடைபெறுவதற்கான வழி வகைகளைக் காணவேண்டும். தமிழ் அதற்குத் தகுதியற்றது என்று தள்ளிவிட முடியாது. கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

சுதந்தரம் கிடைத்தவுடன் ஆங்கிலத்தை விரட்டுவதில் ஆர்வம் இருந்தது. ஆனால், இன்று நிலைமை மாறி, 5-ம் வகுப்பு, 4-ம் வகுப்பு, இப்போது 3-ம் வகுப்புக்கே ஆங்கிலம் பாடமாக வந்துவிட்டது!

இனி, கர்ப்பிணியின் வயிற்றில் இருக்கும்போதே குழந்தைக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க வேண்டிய நிலை வரலாம்.

தமிழ் ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் அமைவதற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளைப் போக்க வழிகாண வேண்டும்.

[23—12—62 அன்று சென்னை மேற்கு மாம்பலம் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவில் திரு. சி. என். அண்ணாத்துரை அவர்கள் பேசியது. 'நவமணி' 25—12—62 இதழில் வெளியானபடி.]

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

WRAPPER PRINTED AT
THE PROGRESSIVE PRINTERS, MADRAS-1.